விலை ரூபா: 5.00

பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 | வள்ளுவர் ஆண்டு 2033 | ஐப்பசி30 சனிக்கிழமை (16.11.2002) | தொலைபேசி~ 2223378 | ஒலி 332

**அம்பாள் ரவல்ஸ்**

கிலோமீற்றருக்கு 18ரூபா

- பலாலி விமான நிலையத்திற்கு 1200/-
- அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு விசேடசலுகைக் கட்டணம்.
- A/C, Non A/C வாகனத்துக்கு

அம்பாள ரவல்ஸ்
கம்பஸ்லேன் (மக்கள் வங்கிக்கு அருகில்)
திருநெல்வேலி
T.P. 2222742, 0777- 518319

## பாதுகாப்பு உப குழுக் கூட்டம் இன்று முகமாலையிலேயே நடைபெறும்!

(யாழ்ப்பாணம்)

உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாகவும் அங்கு மீள்குடியேற்றம் தொடர்பாகவும் ஆராய்வதற்காக இன்று தெல்லிப்பழையில் நடைபெறவிருந்த பாதுகாப்பு உப குழுக் கூட்டம் முகமாலை சூனியப் பிரதேசத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்தில் நடைபெற்ற முதற்கட்ட இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்டதன் பிரகாரம் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாகவும், அங்கு மீளக்குடியமர்வது தொடர்பாகவும் ஆராய்வதற்கான பாதுகாப்பு உபகுழுக் கூட்டம் வடக்கு கிழக்கில் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

இதன் பிரகாரம் கடந்த 13ம் திகதி முகமாலையில் இக் கூட்டம் நடைபெற்றது.

அடுத்த பாதுகாப்பு உப குழுக் கூட்டத்தை தெல்லிப்பழையில் நடத்துவது என்று அக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

எனினும் தெல்லிப்பழையில் இன்று

(10ம் பக்கம் பார்க்க)

## வட - கிழக்கு பிரதேச செயலகங்களில் சிங்கள அதிகாரிகள் நியமிக்கப்படுவர்

### அரசின் நடவடிக்கைக்கு அதிருப்தி

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள பிரதேச செயலகங்களில் சிங்கள உயர் அதிகாரிகளை நியமிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள 77 பிரதேச செயலகங்களில் 32 பிரதேச செயலகங்களுக்கு சிங்கள உயர் அதிகாரிகளை நியமிப்பதற்கு அமைச்சு தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை தொடர்பாகத் தமிழ்த் தேசிய கூட்ட

(10ம் பக்கம் பார்க்க)

### இனப்பிரச்சினைக்குத் தீர்வாக

# "சமஷ்டி" முறையை அரசு முன்வைத்தால் அதனைப் பொ.ஐ.முன்னணி பரிசீலிக்கும்!



### முன்னாள் அமைச்சர் கதிர்காமர் தெரிவிப்பு

(நமது நிருபர்)

**இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சமஷ்டி ஆட்சி முறையை அரசு முன்வைக்குமாகவிருந்தால் அதனை பொதுஜன ஐக்கிய முன்னணி பரிசீலிக்கத் தயாராக உள்ளது என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், ஜனாதிபதியின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.**

இனப்பிரச்சினைத்தீர்வுக்கு அரசும், விடுதலைப்புலிகளும் தாய்லாந்தில் மேற்கொண்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையில் கனடாவில் உள்ளது போன்ற சமஷ்டி ஆட்சி முறையை இங்கும் ஏற்படுத்துவது தொடர்பாக அந் நாட்டுக்குச் சென்று ஆராய்வதென கலந்துரையாடப்பட்டதை அடுத்தே முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே தொடர்ந்து நடைபெற்று வரும் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக லக்ஷ்மன் கதிர்காமர் மேலும் தெரிவிக்கையில்,

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே இடம்பெற்று வரும் பேச்சுவார்த்தையில் தமிழீழ விடுதலைப்புலிகளே கூடியளவு நன்மை

(10ம் பக்கம் பார்க்க)

### கிழக்கின் அபிவிருத்தி குறித்து கிளிநொச்சியில் இன்று கூட்டம்

(கிளிநொச்சி)

கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பாக இன்று கிளிநொச்சியில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் நடுவப்பணியகத்தில் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்கென தமிழீழ விடுதலைப் புலிகளின் திருமலை -அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர்கள் அவசரமாக அழைக்கப்பட்டுள்ளார்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடனான இச்சந்திப்பில் கலந்துகொள்வதற்காக திருமலை மாவட்ட எம்பி துரைரட்ணசிங்கம், மட்டக்களப்பு மாவட்ட எம்பி ஜோசப்பரராஜசிங்கம், அம்பாறை மாவட்ட எம்.பி.எஸ் சந்திரநேரு ஆகியோரும் விடுதலைப் புலிகளினால் அழைக்கப்பட்டுள்ளனர்


(ம)

# அமைச்சர் மிலிந்த நேற்று

### ஆனைக்கோட்டையில்

# ஜனாதிபதியைச் சந்தித்தார்!

## சமாதானப் பேச்சுக்கள் குறித்து விளக்கமளிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்று ஜனாதிபதி மாளிகையில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளின் நகர்வுகள் மற்றும் தாய்லாந்துப் பேச்சுக்களின் போது ஆராயப்பட்ட விடயங்கள் குறித்து அமைச்சர் மொறகொட ஜனாதிபதிக்கு விளக்கிக் கூறினார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம்-விடுதலைப்புலிகளுடனான சமாதான முயற்சிகள் குறித்து ஜனாதிபதிக்கு எதனையும் தெரியப்படுத்துவதில்லை என்ற பொதுஜன ஐக்கிய முன்னணியின் குற்றச்சாட்டை போக்கும் வகையிலேயே இச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதான முயற்சிகளை மேலும் விரிவான முறையிலும், உறுதியாகவும் செயற்படுத்த

(10ம் பக்கம் பார்க்க)

(ம)

ஆனைக்கோட்டையில்

# லொறி மோதி சிறுவன் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆறுகால்மடப் பகுதியில் லொறி மோதியதில் 7 வயதுச் சிறுவன் ஒருவன் துடிதுடித்துப் பரிதாபகரமாக உயிரிழந்தான்.

நேற்று மாலை6 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் பொனனையா லேன் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த வி.அச்சன் என்ற சிறுவனே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

உயிரிழந்த சிறுவனின் சடலம் யாழ் போதனா வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (த)

ஆயுதப் பாதுகாப்புடன் கடல் வழியாக

# கேணல் பதுமன் - கேணல் கருணா இன்று கிழக்கு மாகாணம் செல்வர்!

(முல்லைத்தீவு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் கேணல் பதுமன், தமிழீழ விடுதலைப் புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் கருணா ஆகிய இருவரும் இன்று முல்லைத்தீவில் இருந்து கடல் வழி மார்க்கமாக வாகரைக்கும், திருகோணமலைக்கும் செல்கின்றனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் இரு தளபதிகளினதும் பாதுகாப்பிற்கு தலா பத்து விடுதலைப்புலி உறுப்பினர்கள் ஆயுதங்களுடன் படகில் செல்ல உள்ளனர்.

இதேவேளை விடுதலைப்புலிகளின் உயர்மட்டத் தளபதிகளின் கடல் வழிப்பயணத்தை இலங்கை கடற்படையினர் தூரத்தில் இருந்தவாறு கண்காணிக்கவுள்ளனர் என்று கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

# கிறிஸ்தவ விவகார அமைச்சராக ஜோண்

(கொழும்பு)

உட்துறை அமைச்சர் ஜோண் அமரதுங்கா தமது அமைச்சுப் பொறுப்புடன் மேலதிகமாக கிறிஸ்தவ விவகாரங்களுக்கான அமைச்சுப பொறுப்பையும் ஏற்றுக் கொண்டுள்ளார்.

நேற்று ஜனாதிபதி மாளிகையில் இவ் அமைச்சுப் பொறுப்பினை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுற்கா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து அமைச்சர் ஜோண் அமரதுங்க பொறுப்பேற்றுள்ளார். (இ)

பொ.ஜ முன்னணிக்கு நோர்வே விடுத்த

# சுற்றுலா அழைப்பை ஜனாதிபதி நிராகரித்தார்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் குழுவொன்றை நோர்வேக்கு சுற்றுலாவுக்கு வருமாறு நோர்வே விடுத்த அழைப்பை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நிராகரித்துள்ளதாக பொ.ஜ.முன்னணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஸ்ரீலங்காவின் விவகாரங்களில் ஒஸ்லோ இப்பொழுது அதிகமாக தலையீடு செய்து வருவதற்கு, தனது வெறுப்பை உணர்த்தும் முகமாகவே அழைப்பை ஜனாதிபதி நிராகரித்துள்ளதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

கடந்த வாரம் நோர்வேயின் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் ஜனாதிபதியை சந்தித்த போது உள்நாட்டு விவகாரங்களில் நோர்வே அதிகம் தலையீடு செய்வது பற்றிய தனது

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நடைபெற்றுமுடிந்த பேச்சுக்களில் நடுநிலையாக செயற்படவில்லை

## நோர்வேமீது கதிர்காமர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தமிழீழவிடுதலைப்புலிகளுக்கே அதிக நன்மை கிடைக்கிறது.

எதிர்க்கட்சியின் தலைவர் அலுவலகத்தில் நேற்றுநடைபெற்றசெய்தியாளர் மாநாட்டில் பொதுஜனஐக்கியமுன்னணி பாராளுமன்றஉறுப்பினர் லக்ஷ்மன் கதிர்காமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அம்மாநாட்டில் அவர் தொடர்ந்தும் கருத்துதெரிவிக்கையில்

தாய்லாந்து சத்தாஹிப் கடற்படைத்தளம் றோஸ் கார்டன் ஹோட்டல் போன்ற இடங்களில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் மூலம் கூடுதலான வசதி வாய்ப்பு புலிகளுக்கே கிடைத்துள்ளது.

நோர்வேஅரசுநடைபெற்று முடிந்த பேச்சுவார்த்தைகளில் நடுவுநிலையாக செயற்படவில்லை.

பேச்சுவார்த்தைகள் முன்னெடுத்துச் செல்லப்படும் போது 5 அம்சங்கள்முன்வைக்கப்பட வேண்டும்.

ஜனாதிபதி சந்திரிகாபண்டாரநாயக்கா குமாரதுங்காவுக்கோஅன்றி பொதுஜனஐக்கியமுன்னணிக்கோ இது தொடர்பாக எதுவும் தெரியாது எனவும் குற்றம்சாட்டியுள்ளார்.

வருங்கால பேச்சுவார்த்தைகளில் அனைத்துக்கட்சிகளினதும் பங்களிப்பு அவசியம் என்பது பொஜனஐக்கிய முன்னணியின் கருத்தாகும்.

ஆயுதம் தாங்கிய போராட்டத்துக்கு அமைதியான அரசியல் தீர்வைக்காண ஒத்துழைப்பு வழங்க பொதுஜன ஐக்கிய முன்னணி முன்வந்திருக்கிறது என்றுகுறிப்பிட்டார்.

ஆனால் இனி நடைபெறவுள்ள பேச்சுக்களை பொது மக்கள் உன்னிப்புடன் அவதானிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

(உ-8)

## கூட்டம்

(மந்திகை)

பளை, மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையின் கீழ் கடந்த இரு வருடங்களுக்கு முன் பணியாற்றிய பாதுகாவலர்களிற்கும், தொழிலாளர்களுக்குமான கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30மணிக்கு பளையில் இயங்கும் வேம்பொடுகேணி பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இச்கூட்டத்தில் 2000ம்ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26ஆம் திகதிவரை கடமையாற்றிய பாதுகாவலர்களைக் கலந்து கொள்ளுமாறு பளை, மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை பொறுப்பதிகாரி சு. தவரத்தினசிங்கம் கேட்டுள்ளார்.

(உ- 23

## பாதுகாப்பு பிரிவு மீது ஜே. வி. பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

மக்கள் விடுதலைமுன்னணியின் அலுவலகங்கள் தாக்கப்பட்டமைக்கும் தமது பாதுகாப்பு பிரிவுக்கும் எந்த விதமான தொடர்பும் கிடையாது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதல்களுக்கு பாதுகாப்பு பிரிவு பொறுப்பேற்க வேண்டுமெனவும் இது தொடர்பில் விசாரணை செய்யுமாறு ஜனாதிபதியை மக்கள விடுதலை முன்னணி கேட்டுக்கொள்ளும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதற்கு பதிலளிக்கையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்துதெரிவிக்கையில்;

இக்குற்றச் சாட்டுகளுக்கு ஆதரவான சான்றுகளை சமர்ப்பிக்குமாறு வீரவன்சாவை பிரதமர் கேட்டுக்கொண்டார்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக விசாரணைகளைநடத்துமாறு தான்ஏற்கனவே பொலிஸ்மாஅதிபரைப் பணித்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார். (உ 8)

## வினைத்திறன் தடைப் பரீட்சை

(சுதுமலை)

சுகாதார சேவைகள் நலநோம்பு அமைச்சின் கீழ் கடமை புரியும் தரம் II அ இல் உள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை தரம் 1க்கு உயர்த்துவதற்கான வினைத்திறன் தடைகாண் பரீட்சையின் எழுத்துப் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது.

யாழ். மாவட்டத்திலிருந்து இந்தப் பரீட்சைக்கு 5 பேர் மட்டுமே தோற்ற இருப்பதால்அவர்களிற்கான பரீட்சை கொழும்பு தாதியர் பயிற்சிப் பாடசாலையில் நடைபெறும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள உத்தியோகத்தர்களிற்கான அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

(உ-252)

## அபிவிருத்தித் தொண்டர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலர் பிரிவின் கீழ் முதலாம் கட்ட அபிவிருத்தித் தொண்டர்களாக கடல்வளத் தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர்களுக்கானமீளாபரீட்சை சம்பந்தமான கலந்துரையாடல் மரவேலைப் பயிற்சிப் பாடசாலையில் எதிர்வரும் 18ம் திகதி திங்கட்கிழமை மு.ப 10.00மணிக்கு இடம் பெறவுள்ளது; (உ)

## சிங்கர் காட்சியகம் இன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

சிங்கர் நிறுவனத்தின் சிங்கர் காட்சியகம் இன்றுசனிக்கிழமை மு.ப11மணிக்கு இல 1ஸ்ரான்லிவீதி யாழ்ப்பாணம் எனுமுகவரியில் திறந்து வைக்கப்படவுள்ளது;

(த)

## 85 நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு

(சுதுமலை)

மானிப்பாய் சுகாதாரவைத்திய அதிகாரி பிரிவில் கடந்த மாதம் மட்டும் 85 கட்டாக்காலி நாய்கள் பிடித்து நஞ்சூட்டி அழிக்கப்பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை புள்ளிவிபரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

(உ- 252)

## கரோல் நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

செவிப்புலன் கட்புலன் இழந்த மாணவர்களுக்கான நவீல்ட் பாடசாலையின் வருடாந்த கிறிஸ்மஸ் கரோல் ஆராதனையும் கலை நிகழ்ச்சியும் இன்று சனிக்கிழமை சென் ஜோன்ஸ் கல்லூரியின் பிரோ மண்டபத்தில் நடைபெறவுள்ளது; (த)

## 53 வீடுகள் அமைப்பு

(மந்திகை)

வடமராட்சி- தெற்கு, மேற்கு பிரதேச செயலர் பிரிவில் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின்நிதியுதவியுடன் வறுமைக் கோட்டின் கீழ்வாழும் 53குடும்பங்களுக்கு வீடமைப்பு வசதிகள் கொடுக்கப்படவுள்ளது.

நெல்லியடிகிழக்கில் 11குடும்பங்களுக்கும் அல்வாய் கிழக்கில் 10குடும்பங்களுக்கும் அல்வாய் பகுதியில் 10குடும்பங்களுக்கும் துன்னாலை தெற்கு, கிழக்கு ஆகிய பகுதிகளில் 22 குடும்பங்களுக்கும் வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

(உ- 23)

## மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு பட்டப்படிப்பு மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், இம்முறை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள வடமராட்சி கிழக்கு பிரதேச மாணவர்களுக்கான விசேட வழிகாட்டல் கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன.

உடுத்துறை மகாவித்தியாலயத்திலும், குடத்தனை தென்னிந்திய திருச்சபை தேவாலய மண்டபத்திலும் பிரதி சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும் இக்கருத்தரங்குகளில் பெருமளவான மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெறுகின்றனர். (உ- 21)

## இயற்கை வளங்களை ஆவணப்படுத்தும்முயற்சிக்கு படையினர் இடையூறு

(மந்திகை)

வடமராட்சி கிழக்கில் உள்ள கரையோரப் பகுதியில் அமைந்துள்ள இயற்கை வளங்களை ஒளிப்பதிவுசெய்ய படையினர் தடை விதித்துள்ளதாக வடமாராட்சி கிழக்கு சுற்றுச் சூழல் பாதுகாப்பு சங்கம் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவில் முறையிட்டுள்ளது.

கடந்த புதனன்று கரையோரப் பகுதியில் உள்ள சவுக்கம்காடு மற்றும் மண் கும்பிகளை படப்பிடிப்புச் செய்துகொண்டிருந்ததாகவும் அப்போது படப் பிடிப்பாளர் சங்கத் தலைவர் மற்றும் செயலாளரை அழைத்து குடத்தனை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி விசாரணை செய்ததாகவும் தங்களிடம் படப்பிடிப்பு செய்த ஒளிப்பதிவு நாடாவை தம் முன்னிலையில் அழிக்குமாறும்பணித்துள்ளதாகவும் அம் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் வடமராட்சி கிழக்கில் உள்ள மணல்காடு முதல் அம்பன் பகுதி வரை வீடியோ படம் பிடித்து ஆவணப்படுத்துவதுடன் இப்பகுதியில் அருகிவரும் இயற்கை வளங்களை படம்பிடித்து ஆய்வினை மேற்கொள்ளும் பொருட்டே தம்மால் படப்பிடிப்புசெய்யப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

இவ் ஒளிப்பதிவு நாடாக்களை அழித்ததினால் 10 ஆயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும்;

இது தொடர்பாக விசாரணையை மேற்கொள்வதுடன் வீடியோ படப்பிடிப்பு செய்ய அனுமதி பெற்றுத் தருமாறும் அம்முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ-23)

## விளையாட்டு உபகரணங்கள்

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை இக்கல்லூரியின் பழைய மாணவர் எஸ் சுரேஸ் குமார் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (உ-252)

## எழுபத்துநான்கு குற்றச்சாட்டுக்கள்

(கொழும்பு)

உடத்தலவின்ன 10முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை தொடர்பானவழக்கு விசாரணைநேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் எரிக திஸ்ஸநாயக்கா, சுனில்ராஜபக்ஷ, டிபாரிவிஜயசுந்தர ஆகிய நீதியரசர்கள் முன்நிலையில் இடம்பெற்றது.

இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டிருக்கும் முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் உட்பட 15பேரும் நேற்றுநீதிமன்றில் ஆஜராகி இருந்தனர்

இவ்வழக்குத் தொடர்பாக சட்டமாஅதிபர் 74குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளார்.

இவ்வழக்கு விசாரணை இவ்வளவு காலமும் கண்டி மஜிஸ்திரேட்டில்நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது;

(உ-8)

## சண்டிலிப்பாய் பி.செ.பிரிவில் சமுர்த்திசிறுகுழுக்கள்மூலம் சுமார் 5 இலட்சம் சேமிப்பு

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சமுர்த்தி சிறுகுழுக்கள் இது வரை 4லட்சத்து 72 ஆயிரத்து 495 ரூபாயினை சேமித்துள்ளனர்.

மேலும் இப்பிரதேச செயலர் பிரிவில் 28கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளன. அவை சமுர்த்திதிட்டத்திற்கு அமைய இரண்டு வலயங்களாகபிரிந்து செயற்படுகின்றன.

இவ்விரண்டுவலயங்களிலும் ஆயிரத்து241 சிறுகுழுக்களும் 94சமுர்த்திச் சங்கங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இங்கு 2சமுர்த்தி வங்கிகள் அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் தெரிய வருகிறது

(உ- 258)

## கொரிய நாட்டுக் கப்பல் தொடர்ந்தும் எரிகிறது

(கொழும்பு)

தென்கொரிய கப்பலில் ஏற்பட்ட தீ நேற்று நான்காவது நாளாகவும் எரிந்துகொண்டிருக்கிறது.

கொழும்பு துறைமுகத்தில் இருந்து சுமார் 100கடல்மைல் தூரத்தில் உள்ள தங்காலை கடற்பிரதேசத்தில் றொசோடானுக்கு பட்டாசுகளை ஏற்றிச் சென்றுகொண்டிருந்த போதே இத்தீவிபத்து ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

இக்கப்பலில் தொடர்ந்தும் பட்டாசுகள் வெடித்துக் கொண்டிருப்பதால் தீயை அணைக்கும் முயற்சிகள் கைகூடவில்லை எனத்தெரியவருகிறது.

இக்கப்பலில் பணியில் ஈடுபட்ட 10மீனவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனவும் மற்றும்ஒருவர் காணாமல் போய்யுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

(உ-8)

## 3ஆம் சுற்று நிகழ்ச்சி நிரலில் காவல்துறை, நீதிமன்ற விவகாரம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் தமது பொலிஸ் நிலையங்களையும் நீதிமன்றங்களையும் வடகிழக்கு மாகாணத்தின் பல இடங்களிலும் ஸ்தாபித்து வருகின்றமை தொடர்பான விடயங்களை மூன்றாம் கட்ட சமாதான பேச்சுக்கான நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ளலாம் என பிரதமர் தெரிவித்திருப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்;

பாராளுமன்ற பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் 9 பேருடன் பிரதமர் சந்தித்து பேசியபோது அவர் இவ்வாறு கூறினார் என அமைச்சர் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்;

வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் வாழும் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாக சாதகமான பதிலை பிரதமரிடம் இருந்து பெற்றுக்கொள்வதே இச்சந்திப்பின் நோக்கமாகும்.

பிரதமருக்கும் எமது கட்சிக்கும் இடையே நடைபெற்ற பேச்சுக்களின்போது கட்சியால் ஏற்றுக்கொள்ளக் கூடிய பல பதில்கள் கிடைத்துள்ளன.

விசேடமாக வடக்கு- கிழக்கு பிரதேசங்களில் சட்டம் மற்றும் சமாதானத்தை பாதுகாப்பது தொடர்பான வெவ்வேறு கேள்விகளை பிரதமரிடம் கேட்க முடிந்ததாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

(உ-8)

# எதிர்வரும் பொதுத்தேர்தலில்

# பெரும்பான்மை பலம் எமக்கே

## பிரதமர் ரணில் நம்பிக்கை

(கொழும்பு)

தற்போதைய பாராளுமன்றத்தில் மேலாண்மை பற்றிய கேள்விக்கு இடமேகிடையாது எனபிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுபாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

வரவு செலவு திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பிரதமர் அங்குதொடர்ந்தும் உரையாற்றுகையில் இந்தப் பாராளுமன்றத்தின் உறுப்பினர்களுக்கு மக்கள் ஏகமானதாக ஆதரவு வழங்கி அதிகாரத்தில் அமர்த்தியுள்ளனர்.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் ஆகக் கூடுதலான பெரும்பான்மைப் பலத்தை தற்போதைய அரசாங்கமே பெறும்.

எதிர் காலத்தில் பாராளுமன்றம் அதன் கடமைப் பரப்புக்களை நிறைவேற்றக் கூடிய வகையில் அதனை பலப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(உ-8)

## கூட்டுச்செயலணியில் மக்கள்பங்களிப்பு அவசியம்

### ஜெனிவா பிரதிநிதிகளிடம் வலியுறுத்து

(தென்மராட்சி)

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் இணைந்து அமைக்கவுள்ள கூட்டு செயலணியில் மக்களின் பங்களிப்பு அவசியம் இருத்தல் வேண்டும் இல்லையேல் அம்முயற்சிஉரிய நோக்கத்தினை அடையமாட்டாது.

என யாழ்.மாவட்ட மனித நேய அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் எஸ், பரமநாதன் அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு ஜெனிவாவில் இருந்து வருகை தந்திருந்த யு.என்.டி.பி,மற்றும்யு என். எச். சீ ஆர். உயர்மட்ட அதிகாரிகளிடம் தெரிவித்திருந்தார்.

அவர் அங்குமேலும் குறிப்பிடுகையில், யாழ்ப்பாணக் குடாநாட்டில் இடம் பெயர்ந்தோர் முகாம்களில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இன்னமும் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்கின்றன. இக்குடும்பங்களின் வாழ்க்கையில் எவ்விதமான மாற்றங்களும் இதுவரை ஏற்படவில்லை.

குடாநாட்டு மக்கள் போதுமென்ற அளவில் கஷ்டப்பட்டுவிட்டார்கள். இவர்களின் வாழ்வில் நன்மையான மாற்றங்கள்ஏற்படுத்தப்படவேண்டியது மிக அவசியமாகும்.

இங்கு அமுல்படுத்தப்படுகின்றசெயல் திட்டங்கள் யாவும் குறுங்காலத்திட்டங்களாகவேஇருக்கின்றன. மக்களின் நீண்ட கால இலக்கினைக் கொண்டவைகளாக அவை அமைவதில்லை எனவே, இத்தகைய திட்டங்களில் மக்களின் ஒருமித்த பங்களிப்புகள் இடம் பெறவேண்டும்.

அத்துடன், அமுல் செய்யப்படும் திட்டங்கள் பற்றிய கண்காணிப்பும் மதிப்பீடும் மிகவும் அவசியமானதாகும் எனக்குறிப்பிட்டார்.

(உ-77)

## கிறிஸ்தவ சமய அமைச்சர் பதவியேற்பு

(கொழும்பு)

உள்துறைஅமைச்சர்ஜோன் அமரதுங்க கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்றுக்காலை 10.00 மணியளவில்ஜனாதிபதி முன்னிலையில் இவ் வைபவம் நடைபெற்றது.

(உ-8)

## செயலகப் பணியாளர் மக்களை நாடிச்சென்று தேவைகளைஇனம்காண்பர்

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மக்களின் உண்மையான தேவைகள், பிரச்சினைகள்பற்றி அறியும்பொருட்டு அரச செயலக பணியாளர்களை கிராமங்கள்தோறும் அனுப்புவதற்கான திட்டம் ஒன்றினைச் செயற்படுத்தவுள்ளதாக யாழ். அரசாங்க அதிபர் செ. பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர்மேலும் குறிப்பிடுகையில்;

அரச ஊழியர்கள் மக்களின் தேவைகள், பிரச்சினைகளை அறிந்து செயல்படும் பட்சத்திலேயே மக்களின் பிரச்சினைகளைத்தீர்க்கமுடியும்.

அரச ஊழியர்கள் அதிகாரிகள், அதிகாரத் தோரணையில் இருந்துகொண்டு செயல்படுவதற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டியது அவசியமானது.

பாதிக்கப்பட்ட மக்களின் உள்ளக்குமுறல்களை நாம் பொறுமையுடன் கேட்க வேண்டும். மக்களுக்குச் சேவை செய்வதற்காகவே நாம் நியமிக்கப்பட்டோம். இன்றைய காலகட்டத்தில் புதிய அணுகுமுறைகளில்நாம் செயல்படவேண்டிய தேவை உணரப்படுகின்றது என்று குறிப்பிட்டார். (உ-77)

## குருநகர் கடற் பகுதியில் இரவுபகல் மீன்பிடி

(யாழ்ப்பாணம்)

குருநகர் கடற்பகுதியில் பாரிய றோலர் படகுகளின் பாவனை அதிகரித்துள்ளது.

இரவு - பகல் மீன்பிடிக்கு இப்பகுதியில் அனுமதிக்கப்பட்டிருப்பதைத் தொடர்ந்து இவ்வாறான பாரிய படகுகள் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுகின்றன.

இதேவேளை, தென்பகுதியில் இருந்து பாரிய படகுகளை தரைவழிப் பாதையூடாக எடுத்துவருவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

(உ-6)

## 'கல்லறை தழுவும் கானங்கள்' இன்று வெளியீடு

(வவுனியா)

தமிழீழ விடுதலைப்புலிகளின் 'கல்லறை தழுவும் கானங்கள்' ஒலிப்பதிவுநாடா வெளியீட்டு விழா இன்று மாலை 5 மணிக்கு வவுனியா நகர சபை மண்டபத்தில் நிதர்சனப் பொறுப்பாளர் சேரலாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன் வெளியீட்டுரையை தமிழீழ விடுதலைப்புலிகளின் கலைப்பண்பாட்டுச் சழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை நிகழ்த்தவுள்ளார்.

வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலனும் இந்நிகழ்வில் கலந்து கொள்வார்.

இதனை அடுத்து சாந்தன் குழுவினரின் இசை நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது.

(வ)

## மகரஜோதிப் பெருவிழா

(கொழும்பு)

அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம் நடத்தும் 20 வது ஆண்டு மகரஜோதிப் பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் மாதம் 4 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

(உ)

# வேலை வாய்ப்பற்ற நிலையில் யாழ். மாவட்டத்தில் 83,061 பேர்

## அரச சார்பற்ற இணையம் அறிக்கை

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளிலும் மொத்தமாக 83 ஆயிரத்து 61 பேர் வேலை வாய்ப்புகள் அற்ற நிலையில் வாழ்ந்து வருவதாக யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

இதேசமயம்,மாவட்டத்தில் கீழமைப்பு நிலையில் ஒரு லட்சத்து 11 ஆயிரத்து 172 பேர் இருந்து வருகின்றனர் என்ற தகவலும் மேற்படி ஆய்வின் மூலம் அறிய வந்துள்ளது.

வேலை வாய்ப்பு அற்ற நிலையில் நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் 680 பேரும் வேலணையில் 636 பேரும், ஊர்காவற்றுறையில் ஆயிரத்து 662 பேரும் யாழ்ப்பாணத்தில் 6 ஆயிரத்து 758 பேரும், நல்லூரில்7 ஆயிரத்து 881 பேரும்,சண்டிலிப்பாயில் 18 ஆயிரத்து 837 பேரும், சங்கானையில் 10 ஆயிரத்து 67 பேரும், உடுவிலில 4 ஆயிரத்து 331 பேரும், தெல்லிப்பழையில் ஆயிரத்து 448 பேரும், கோப்பாயில் 6 ஆயிரத்து 169 பேரும், சாவகச்சேரியில் 10 ஆயிரத்து 470 பேரும், கரவெட்டியில் 6 ஆயிரத்து 220 பேரும், பருத்தித்துறையில் 6 ஆயிரத்து 552 பேரும் மருதங்கேணியில் ஆயிரத்து 350 பேருமாக மொத்தம் 83 ஆயிரத்து 61 பேர் உள்ளனர்.

இத் தொகையில் பட்டதாரிகள், க.பொ. த (உயர் தரம்) சித்தியடைந்தவர்களும்உள்ளடங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(உ-77)

## பாராளுமன்ற வளவினுள் கடை அமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

பாராளுமன்ற வளவினுள் பாராளுமன்றக் கடையொன்று திறக்கப்படவுள்ளது.

பாராளுமன்ற ஆவணங்கள் நினைவுச் சின்னங்கள் பரிசுப் பொருள்கள் என்பனவே இக்கடையில் விற்பனை செய்யப்படவுளளன.

இக் கடையை திறப்பதற்கான அனுமதியை சபாநாயகர் யோசப் மைக்கல் பெரேரா வழங்கியுள்ளதாக பாராளுமன்ற விவகார அமைச்சர் ஏ. எச். எம். அஸ்வர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்துக்கு விஜயம் செய்யும் பிரமுகர்களும் மாணவ, மாணவிகளும் தாம் அங்கு விஜயம் செய்தமைக்கான நினைவுச் சின்னம் ஒன்றை வாங்கிச் செல்ல இக்கடை வழி வகுக்கும் என நம்பப்படுகிறது.

இதேவேளை உலக நாடுகளில் உள்ள பல பாராளுமன்றங்களில் இவ்வாறான கடைகள் இருப்பதுவும் குறிப்பிடத்தக்கது.

(உ-8)

## பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபை விரைவில் அமைப்பு

(கொழும்பு)

பாவனையாளர்பாதுகாப்பு அதிகார சபை விரைவில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான சட்டமூலம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்று நியாய விலை ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

புதிதாக அமைக்கப்படவுள்ள பாவனையாளர்கள் பாதுகாப்பு அதிகார சபை பாவனையாளர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் சகல சம்பவங்கள் தொடர்பாகவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரத்தை கொண்டுள்ளது.

இப்புதிய சட்டத்தின் படி மோசடிகளில் ஈடுபட்டுவரும் வர்த்தகர்களுக்கு எதிராக தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு கடும் தண்டனைகளும் விதிக்கப்படவுள்ளன.

வைத்திய சட்டத்துறைகளிலும் மக்களிற்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளுக்கு எதிராக இவ்வதிகார சபை நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

(உ-8)

## கார்த்திகேசன் நினைவு நூல் நாளை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

அமரர். மு. கார்த்திகேசனின் (கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் மாஸ்ரர்25வது ஆண்டு நிறைவையொட்டிய நினைவுநூல் வெளியீட்டு விழா நாளை பி.ப. 4.30 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதிமண்டபத்தில் யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர்,சங்க கொழும்புக் கிளைத் தலைவர் கலாநிதி வி. அம்பலவாணர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், நூல் வெளியீட்டுரையை வடபிரதேச தொழிற்சங்கங்களின் கூட்டுச் சபையின் முன்னாள் செயலாளர் எம். குமாரசாமியும், நூல் ஆய்வுரையை பேராசிரியா எம். ஏ. நுஃமானும் நிகழ்த்தவுள்ளனர்.

(உ-3)

### வாதரவத்தைப் பாடசாலை

## அதிபர், ஆசிரியர்களுக்கு கஷ்டப்படி இல்லை

(கோப்பாய்)

கோப்பாய் கோட்டத்தில் கஷ்டப் பிரதேச பாடசாலையாக வாதரவத்தை விக்னேஸ்வராவித்தியாலையம் அமைந்துள்ளது.

இங்கு கடமையாற்றும் அதிபர் ஆசிரியர்கட்கு 1994ம் ஆண்டின்பின் கஷ்டப் பிரதேச ஊக்குவிப்புப்படி நிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ் மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இவ் ஊக்குவிப்புப்படி வழங்கப் படுவதாகவும் இதுபற்றி தாம் சம்பந்தப்பட்டவர்களுடன் பலதடவை தொடர்பு கொண்டும் இதுவரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை எனவும் சம்பந்தப்பட்டவர்கள் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது. (உ-79)

## உயர் நீதிமன்றம் மனுவை ஏற்றது

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் அண்மையில் மேற்கொண்ட தூதுவர் நியமனங்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுளளது.

நைஜீரியத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள ஏ. எம். ஜே. சாதிக் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்திருந்தார்.

(உ-3)

## மேயர் பயணம்

கொழும்பில் இடம்பெறவுள்ள தமிழர் விடுதலைக்கூட்டணியின் மத்திய குழுக்கூட்டத்தில் பங்கேற்பதற்காக யாழ். மாநகர முதல்வர் எஸ். கந்தையன் நேற்று கொழும்பு சென்றுள்ளார்.

(உ-6)

# ஈராக் செல்வதற்கு ஆயுத பரிசோதகர்கள் ஆயத்தம்

(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தை ஈராக் ஏற்றுக்கொண்ட தைத் தொடர்ந்து ஆயுதப்பரிசோதகர் கள் ஈராக் செல்ல ஆயத்தங்களை மேற்கொண்டுள்ளனர்.

இதன்படி 20க்கும் அதிகமான தொழிநுட்பவியலாளர்கள், தொலைத தொடர்பு, படப்பிடிப்பு, போக்குவரத்து ஆகிய நடவடிக்கைகளை ஒழுங்கு செய்யவென எதிர்வரும் திங்கட்கிழமை பக்தாத் போய்ச் சேரவுள்ளனர்.

இரசாயன உயிரியல் ஆயுத பரிசோதனைகளுக்குப் பொறுப்பான பிரதம ஆயுத சோதனையாளர் ஹான பிரிக்கும் அணுவாயுத நிபுணரான எல்ராடியும் பக்தாத்தில் சில தினங்கள் தங்கியிருந்து ஆயுத சோதனை நடவடிக்கைகளை ஒழுங்கமைப் பார்கள்.

இம்மாதம் 25 ஆம் திகதி ஆயுத பரிசோதனையாளர்களும் நிபுணாகளும் பக்தாத் செல்வார்கள் என்றும் 100இற்கும் அதிகமான கேந்திர நிலையங்களை சோதனையிடு வார்கள் என்றும் எதிர்பார்க்கப்படு கிறது.

ஐக்கிய நாடுகள் ஆயுத சோதனை யாளர்கள் கடந்த 3வருடகால இடை வேளையின் பின்னர் மீண்டும் ஈராக் செல்வது குறிப்பிடத்தக்கது. (பி-4)

# 2 வயது குழந்தை நரபலி தமிழ் நாட்டில் கோரம்

(சென்னை)

தமிழ்நாடு தூத்துக்குடியில் 2வயதுக் குழந்தையொன்று கழுத்து வெட்டப் பட்ட கொடூர சம்பவம் அண்மையில் இடம் பெற்றுள்ளது.

தூத்துக்குடி பொட்டல் காடு கிராமத்திற்குச் செல்லும் வழியில் இருக்கும் காட்டுப்பகுதியில் கழுத்து வெட்டப்பட்ட ஆண்குழந்தையின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அக்குழந்தைக்கு காது குத்தப் பட்டு செப்புக் கம்பியிலான வளையமும் அணியப்பட்டுள்ளது.

சடலத்தின் அருகில் தேங்காய், ஊதுபத்தி,குங்குமம், வீபூதி, தீப்பெட்டி, வாழைப்பழம், தேசிக்காய், வெற்றிலை, பாக்கு என்பனவும் கண்டெடுக்கப் பட்டுள்ளன (பி-4)

# தென் கொரியா சிங்கப்பூர் கூட்டு உடன்படிக்கை

(சிங்கப்பூர்)

சிங்கப்பூர் கென்கொரியாவும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கான பேச்சுவார்த்தைகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாக இருநாடுக ளும் இணைந்து விடுத்துள்ள அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூருடன் பல நாடுகளுடன் இணைந்து கூட்டுவர்த்தக உடன் படிக்கைகளில் ஈடுபட்டுவரும் இந்த வேளை தென்கொரியா வேறு நாடாக சிங்கப்பூருடன் கூட்டு சுதந்திர வர்த் தக உடன்படிக்கையில் ஈடுபடவிருப் பது குறிப்பிடத்தக்கது. (பி-2)

# ஏவுகணைகளை கண்டு பிடிக்கும் புதுவகை விமானம்

(வாஷிங்டன்)

நாட்டுக்கு மேலே பல மாதங்கள பறந்து கொண்டிருக்கக் கூடியதும் வெளியிலிருந்து பகைவர்களால் ஏவப்படும் ஏவுகணைகளைக் கண்டு பிடித்து முன்கூட்டியே அறிவிக்க கூடியதுமான ஆளில்லாத பெரிய விமானக் கப்பல் ஒன்றை உருவாக் குமட அமெரிக்க ராணுவ அதிகாரி கள் பாதுகாப்பு சாதனங்களை உருவாக்கித்தரும் ஒப்பந்தகாரர் களைக் கேட்டிருக்கின்றனர்.

65 ஆண்டுகளுக்கு முன்னர் ஜேர்மனியால் தயாரிக்கப்பட்ட இப்படியான ஒருவிமானம் வெடித்து எரிந்து போயிருந்து.

நாடுக்குள் ஊடுருவி வரக்கூடிய ஏவுகணைகளை துல்லியமாகக் கண்டு பிடித்து அறிவிக்கக் கூடிய விதத்தில மேலே பறந்து கொண்டிருக்கக்கூடிய விமானம் ஒன்றே தங்களுக்குத் தேவைப்படுவதாக அமெரிக்க ராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இப்படியான ஒரு விமானம் உருவாக் கப்படுமானால் அதனை தொடர்ந்தும் சுமார் 70,000அடி உயரத்தில் நிலை நிறுத்திவைக்க முடியும். இவை நல்ல முறையில் அவதானிப்பு நடவடிக் கைகளிலும் வேறு இடங்களில் உள்ள "ராடர்" சாதனங்களுக்கு மாற்று ஏற்பா டாகவும் பயன்படுத்த முடியும் என் றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (பி)

# கர்நாடக அரசு கோரினால் நாகப்பாவை மீட்க நடவடிக்கை

## ஜெயலலிதா அறிவிப்பு

(சென்னை)

கர்நாடக அரசு முறையாகக் கேட்டுக் கொண்டால் வீரப்பனால் கடத்தப்பட்ட கர்நாடக அமைச்சர் நாகப்பாவை மீட்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.


சென்னையில் நேற்று செய்தி யாளர்களிடம் கருத்துத் தெரிவிக் கையில்,வீரப்பனை கைது செய்வதற கான நடவடிக்கைகளைத் தனது அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கர்நாடகஅரசு கேட்டுக் கொண்ட மைக்கிணங்கவே முன்னர் கர்நாடகக காட்டுப் பகுதியில் தேடுதல் நடவடிக கையில் ஈடுபட்ட தமிழகப் பொலிஸார் திரும்பி அழைக்கப்பட்டதாகவும் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

நாகப்பாவை மீட்க கர்நாடகம் மற்றும் தமிழக அரசுகள் உரிய நடவடிக் கைகளை எடுக்கவில்லை என்று அண் மையில் இந்தியப்பிதமரைச் சந்தித்த நாகப்பாவின் குடும்பத்தினர் குற்றஞ்சாட் டியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# அதிக குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்

## இத்தாலிய மக்களுக்கு போப்பாண்டவர் கோரிக்கை



(உரோம்)

அதிக குழந்தைகள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று ரோம் நகரில் போப்பாண்டவர் இத்தாலிய மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஒரு நாடு சமுதாயரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் வளர்ச் சியடைவதற்கு குழந்தைப்பேறும் அதன் வளர்ச்சியுமே முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்த நிலையில் இத்தாலி,உலகிலேயே குழந்தைப் பிறப்பு வீதத்தில் மிகக் குறைந்த நாடுகளில் ஒன்றாகவும் முதியோர் கள் அதிகம் வாழும் நாமுகளில் ஒன்றாகவும் இருக்கின்றது என்று இத்தாலியின் ரோம் நகரிலுள்ள பாராளுமன்றத்தில் முதற்தடவை யாக உரையாற்றிய போப்பாண்ட வர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இத்தாலியில் வாழும் மக்கள் இனிவரும் காலங்களில் அதிக குழந் தைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அவர் கோரியுள் ளார்.

இதேவேளை இத்தாலிப்பாராளு மன்றத்தில் முதற்தடவையாக போப பாண்டவர் ஆற்றிய உரைக்கு பல தடவைகளிலும் கரகோசங்கள் செய்து உறுப்பினர்கள் வரவேற்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.(பி-2)

# இலண்டன் நகர வீதிகளில் மாற்றுடையில் பொலிஸார்

(லண்டன்)

லண்டன் நகரில் தற்கொலைக் குண்டுதாரிகள் நுழைவதை கண்டு பிடிக்க பொலிஸார் புதிய முறை யொன்றை கடைப்படிப்பதாக உத் தேசித்திருக்கிறார்கள்.

இதன்படி உளவு பொலிஸ் அலுவலர் கள் சாதாரண ஊர் சுற்றிகள் போல மாற்று உடைகளில் நகரத்தில் நடமாடு வார்கள். ஆபத்தான ஆயுதங்களைக கண்டு பிடிப்பதில் பயிற்சியளிக்கப் பட்ட நாய்களும் அவர்களுடன் நடமாடும்.

அல்கெய்தா தீவிரவாதிகளின் திடீர் தாக்குதலகள் பிரிட்டனில் ஏற்படலாம் என்ற பீதியின்காரணமா கவே இந்தப்புதிய ஏற்பாடு.

அல்கெதா பயங்கரவாதிகளால் பிரிட்டனில் எந்த நேரத்திலும் தாக்குதல கள் நடத்தப்படலாம் என்ற வகையில் சில தினங்களுக்க முன் பிரதம மந்திரி ரொனி பிளேயர் கூறியிருந்ததையடுத்து பொலிஸார் எச்சரிக்கையடைந்துள்ளனர்.

இவ்வாறு மாற்றுடையில் திரியும் பொலிஸார் தம்முடன் கொண்டு செல்லும் கலப்பு இன நாய்கள் சுமார் 20-30மீட்டர் தொலை விலிருந்தே வெடிபொருட்களை மோப்பம் பிடித்துவிடுமாம்.

நாயைப் போலவெடிமருந்துப் பொருட்களைக் கண்டு பிடிக்கக் கூடிய வேறு சாதனம் இல்லையென் றும்,ஒருவர் வெடிமருந்து வைத்திருப பலரைக் கண்டு பிடித்ததும் இந்த நாய்கள் அவருக்கு எந்தவித சந்தேக மும் ஏற்படாத வகையில் உள்ள அலுவலர்களுக்கு அறிவித்துவிடும் என்றும் அவர்கள் தெரிவித் துள்ளனர்.

இந்த புதிய நுட்பமுறை வேறுபல நுட்பங்களில் ஒன்று என்றும் இவை இப்பொழுது நடைமுறையில் செயல் படுத்திப் பார்க்கப்படுகின்றன வென்றும் ஸ்கொட்லண்ட் யார்ட் உளவு பொலிஸ் உழவுக் கொமிஷனா பார்பரா வைல்டிங் தெரிவித்துள்ளார். (பி)

உலக தரிசனம்

# இந்திய மிக்விமான விபத்தில் 2 விமானிகள் உயிரிழப்பு

(புதுடில்லி)

மேற்கு வங்காள மாநிலத்தில் மிக் 21 ரக இந்திய போர் விமானம் ஒன்று நேற்றுநேற்று முன்தினம் காலை விபத்துக்குள்ளாகியதில் 2 விமானிகளும் உயிரிழந்துள்ளனர்

சுமார் 20 நிமிடங்கள் வானில் பறந்து பயிற்சியில் ஈடுபட்டுக் கொண் டிருந்த இந்த விமானம் தரையிறங்கும போது இயந்திரக் கோளாறு காரண மாக தரையில் வீழ்ந்து நொறுங்கியுள்ளது.

விமானத்திலிருந்த 2 விமானிகளும் தரையில் குதித்து உயிர்தப்ப முயற்சி செய்தபோதிலும் அவர்களின் முய ற்சி பலனளிக்கவில்லை.

விபத்து இடம் பெற்ற இடத்திற்கு சென்ற இந்திய வான்படை இதிகாரி களும்,பொலிஸாரம் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தியாவில் மிக்ரக் விமானங்கள் அடிக்கடி விபத்திற்குள்ளாகி வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (பி-4)

நாட்டின் பாதுகாப்பு அச்சுறுத்தப்பட்டால்

# அணு ஆயுதத்தைப் பயன் படுத்துவோம்

## இந்திய ஜனாதிபதி அறிவிப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டால் அணுவாயுதத் தைப் பயன்னடுத்தத் தயங்க மாட் டோம் என்று இந்திய ஜனாதிபதி டாக்டர் ஏ.பி அப்துல் கலாம் எச்சரித் துள்ளார்.

இந்தியாவின் முதலாவது பிரதமர் ஜவஹர்லால் நேருவின் 113ஆவது பிறந்ததினத்தையொட்டி டில்லியில் இடம் பெற்ற சிறுவர் தினவிழா ஒன்றில் கலந்து கொண்டு உரையாற றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தியா ஒரு போதும் அணுவா யுதத்தைப் பயன்படுத்த மாட்டாது என்று முன்னர் கூறி வந்திருப்ப தைச் சுட்டிக்காட்டிய ஜனாதிபத தற்போது பெரும்பாலான நாடுகள் அணுவாயுதத்தை வைத்திருக்கும் போது தாமும் வைத்திருக்க வேண்டிய நிர்ப்பந்திற்குத் தள்ளப்பட்டிருப்பதாக கூறினார்.

தமது நாட்டை வளர்ச்சி பெற்ற நாடாகவும் உலகில் வலிடையுள் ளதாகவும் உருவாக்குவதற்குச் சிறுவா கள் கட்டாயமாக அறிவை வளர்த்துக கொள்ளக் கடுமையாக உழைக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தி யுள்ளார்.

இதேவேளை வாழ்க்கையில் முன்னேற நற்சிந்னை, திறனாற்றல்,



விடாமுயற்சி என்பன அவசியம் என்று சிறுவர்களுக்கு அவர் சுட்டிக்காட்டி யுள்ளார். (பி-4)



கனடா தலைநகர் டொரண்டோ வில் நடைபெற்ற 'திராயல் அக்ரி கல்சர் விண்டர் பேயர்' என்ற காய்கறி கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த 994 பவுண்ட் எடைகொண்ட பீர்க்கங் காய் வகையைச் சேர்ந்த ஒரு காயை படத்தில் காணலாம்.

நைஜீரியட் தலைநகர் அபுஜாவில் தொடங்கியுள்ள உலக அழகிப் போட் டியில் பங்கேற்க வந்துள்ள பல்வேறு நாட்டு அழகிகள். இப்போட்டியில் 80 நாட்டு அழகிகள் கலந்து கொள்கின் றனர். உலக அழகியாகப் போவது யார் என்பது டிசம்பர் 7-ந் தேதி தெரிய வரும்.



# இன்று ஒரு தகவல்

## மனித மரியாதை!

ஒரு பெரிய அரசியல் கூட்டம். அதற்கு மத்தியில் ஒரு வயதான பெரியவர்எதையோ தேடிக் கொண்டிருக்கிறார். வயதான காலத்தில் வந்த இடத்தில் எதையோ போட்டு விட்டார் போல இருக்கிறது என்று நினைத்து, பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஒருவர் அவரிடம் நெருங்கி 'ஐயா பெரியவரே எதைத்தேடிக் கொண்டிருக்கின்றீர்கள்?' என்று கேட்டிருக்கிறார். 'ஒரு மனிதனைத் தேடிக் கொண்டிருக்கிறேன்' என்றாராம் அந்தப் பெரியவர். கேட்டவர்மிரண்டு போய் எட்ட ஓடிப்போய்விட்டார்.

இப்போது செம்மறியாட்டுக்கு என்று சில சுபாவங்கள் இருக்கின்றன. சிங்கம், கரடி, புலிக்கென்று சிலசுபாவங்கள் இருக்கின்றன. நரிக்கென்று சில சுபாவங்கள் இருக்கின்றன. இப்படிப்பட்ட மிருக சுபாவங்கள் மனிதனிடம் ஒவ்வொரு நேரம்ஒவ்வொருமாதிரியாகத்தலை தூக்குகிறது. அதனால் அவன் மனித சுபாவத்தை மறந்து விடுகிறான். அதனாலேதான் மனிதனைத் தேட வேண்டிய அவசியம்ஏற்பட்டுவிடுகிறது.

மிருகங்கள் மனிதன்மாதிரி வேஷம் போடுவதில்லை. ஆனால் மனிதர்கள் மிருகம் மாதிரி வேஷம் போடுவது மட்டுமல்ல, சில சமயங்களில் மிருகமாகவே மாறிப் போவதும் உண்டு. ஒரு பையன் பி. ஏ. படித்திருந்தான். அதனாலேயே வேலைக்கு அலைகிறான். எத்தனை படிகளில் ஏறி இறங்கி விட்டான். அவன் உடம்புக்கு ஒருதேகப் பயிற்சி கிடைத்ததே தவிர, வேலை கிடைக்கவில்லை. யோசித்தான். அந்த நேரம் ஒரு சர்க்கஸ் கம்பெனி அவனுடைய ஊருக்கு வந்து சேர்ந்தது. அந்தக் கம்பனி முதலாளியை போய் பார்த்தான். ஐயா எனக்கு ஒரு வேலை போட்டுக் கொடுங்கள் என்றான்.

அவர், 'உனக்கு பார்விளையாட்டு தெரியுமா?' என்றார். 'எங்கள் கல்லூரியில் அவற்றைக் கற்றுக் கொடுக்கவில்லை' என்றான். 'பயில்வான் மாதிரி எடை தூக்கமுடியுமா?', என்றார். 'இருக்கிற பட்டத்தையே சுமக்க முடியாமல் கஷ்டப்படுகிறேன்' என்றான். 'அப்படி இருக்கும் போது நான் என்னதான்செய்யமுடியும்?' என்றார். 'சும்மா ஒரு கோமாளி வேஷமாவது கொடுங்கள் சார்!' என்றான் அதற்குக் கம்பனியில் ஏற்கனவே நாலுக்கு பேர் இருக்கிறார்களே என்றார். ஏதாவது மனது வையுங்கள்சார் என்று கெஞ்சினான். 'சரி ஒன்று வேண்டுமென்றால் செய்' என்றார் சர்க்கஸ் முதலாளி. 'என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்' என்றான்.

'எங்கள் கம்பெனியில் ஒரு கரடி இருந்தது. அதுகொஞ்ச நாட்களுக்கு முன் செத்துப் போய் விட்டது. அதன் தோலை எடுத்து அப்படியே பதம் பண்ணி பத்திரப்படுத்தி வைத்திருக்கின்றோம். நீ என்ன செய்ய வேண்டும் என்றால் தினமும் அந்தத் தோலை எடுத்து உன் உடம்பிலே போர்த்துக் கொள்ள வேண்டும். கரடி மாதிரியே நடிக்க வேண்டும். உன்னைக் கூண்டிலே அடைத்துக் கூடாரத்துக்குக் கொண்டு வருவோம். நீ கரடி மாதிரியே வித்தையெல்லாம் செய்ய வேண்டும். நீ நிஜமான கரடி என்றே ஜனங்கள் நினைக்க வேண்டும். நீ மனிதன் என்ற இரகசியம் எனக்கும் உனக்கும் மட்டுமே தெரிந்ததாக இருக்கட்டும் என்ன சொல்கிறாய்?' என்றார் கொஞ்சம் கூட யோசிக்காமல் 'சரி' என்று ஒத்துக் கொண்டான் பையன்.

அன்றைக்கே வேஷம்போட ஆரம்பித்துவிட்டான். முதல் காட்சி! கூண்டு வண்டி கூடாரத்துக்குள்ளே வந்து நிற்கிறது. கம்பிக்கதவை தூக்கி விட்டார்கள்; கரடி வெளியில் குதித்து வருகிறது. அந்தப் பையன் தான் கரடி வேடிக்கை எல்லாம் காட்டுகிறது. சைக்கிள் ஓட்டுகிறது. பார்த்தவர்களுக்கு பரம சந்தோஷம்; ஒரே கைதட்டல். கரடிக்கும் மனதுக்குள்ளே மிகவும் குஷி; காட்சி முடிந்ததும் மறுபடியும் கூண்டுக்குள்ளே அடைத்து பின் பக்கம் கொண்டுபோய் விட்டு விட்டார்கள்.

அப்பாடா என்று களைத்துப் போய் அந்தக் கூண்டுக்குள்ளேயே ஒரு மூலையில் உட்கார்ந்து விட்டான் பையன். வேஷத்தைக் கூடக் கலைக்கவில்லை. கொஞ்ச நேரம் கழித்து மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தான். திடீர் என்று ஒரு அதிர்ச்சி; அந்தக் கூண்டுக்குள்ளே ஏற்கனவே அடைக்கப்பட்டிருந்த ஒரு பெரிய கருங்குரங்கு குதித்துக் கொண்டே அவனிடம் ஓடி வந்தது. பையன் பயந்துவிட்டான். வாள் வாள் என்று கத்த ஆரம்பித்துவிட்டான்; வெளியேயும் வர முடியவில்லை; கதவு பூட்டியிருக்கிறது. ஐயையோ என்று கத்திக் கொண்டு அங்கும் இங்கும் ஓட ஆரம்பித்து விட்டான்.

மெதுவாக அந்தக் கருங்குரங்கு இவனிடம் வந்து இவன் கையைப் பிடித்தது; 'பயப்படாதே' என்றது இவனுக்கு ஒரே ஆச்சரியம். என்ன அந்தக் கருங்குரங்கு பேசுகிறது? அந்தக் கருங்குரங்கு 'தம்பி பயப்படாதே! நீ, பீ. ஏ. படித்துவிட்டு இந்த வேஷம் போட்டிருக்கிறாய். நான் எம். ஏ. படித்துவிட்டு இந்த வேஷம் போட்டிருக்கிறேன், நானும் உன்னைப் போல் தான், பிழைப்புக்காக வேஷம் போட்டிருக்கிறேன்' என்றதாம்.

பிழைப்புக்காக மனிதன் மிருகமாகிறதைக் கூட சகித்துக் கொள்ளலாம் மனிதனே மிருகமாக மாறுவதை எப்படிச்சகித்துக்கொள்ள முடியும்! எனக்கு என்னவோ மனிதமரியாதை நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வருவதாகத் தெரிகிறது, மனிதத் தன்மையின் பெறுமதி கூடினால் தான் ஊரும் நன்றாக இருக்கும் உலகமும் நன்றாக இருக்கும். மனித உயிரின் விலையே இப்போது மிகவும் மலிவாகப் போயிற்று; இன்று யாரும் சுட்டுக் கொல்லப்படவில்லை என்றால் அது தான் பெரிய செய்தி, எல்லாவற்றுக்கும் யார் காரணம் என்று நினைக்கிறீர்கள்? மனிதன் தான்! துப்பாக்கிக்குண்டையும் அவன் தான்செய்கிறான், துப்பாக்கிக் குண்டு துளைக்கமுடியாத காரையும் அவன் தான் செய்கிறான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# யாழ். நகர நடைபாதை வியாபாரிகள்
# முதல்வரின் முடிவை உதாசீனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரமுதல்வரின் முடிவுக்கு நடைபாதை வியாபாரிகள் கட்டுப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். நவீன சந்தைப்பகுதி மற்றும் மரக்கறிச்சந்தைக்குள் நிலைகொண்டுள்ளநடைபாதை வியாபாரிகளைமுனீஸ்வரன் வீதியில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடத்திற்குச்சென்று வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு முதல்வர் நேற்றுமுன்தினம்வரை காலக்கெடு விதித்திருந்ததுடன், தவறுவோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும்எனவும் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இருந்தபோதும் நடைபாதை வியாபாரிகள் இவ் எச்சரிக்கைக்கு அசைந்துகொடுப்பதாக இல்லை.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட தரப்பினர்களிடம் அவர்கள் பக்க நியாயத்தைக் கேட்டபோது,

கோட்டை முனீஸ்வரன் வீதிப்பகுதியில் தமக்கென ஒதுக்கித்தரப்பட்ட இடம் போதிய சுகாதார வசதிகள் அற்றதாக காணப்படுவதுடன் வியாபாரத்துக்கு அது உகந்தஇடம் இல்லைஎனவும் சுட்டிக்காட்டினர்.

அத்துடன், மாநகரசபையினர் தமது நிலையைப் புரிந்து செயற்பட வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தனர்.

தவிரவும், தமது முறையான வியாபாரத்திற்கேற்ற வழிவகைகள் செய்யப்படாதவிடத்து இவ் விடத்தை விட்டு அகலப்போவதில்லை எனவும்,

அவ்வாறு அகலுவதாயின் தைமாதத்தின் பின்னரே அது குறித்துப் பரிசீலிக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

(உ-16)

# இராசி பலன்

16-11-2002

(ஐப்பசி30 ,சனி)

துவாதசி பி இ.2 00வரை

உத்தரட்டாதி

மு.ப10.58 வரை

இராகுகாலம் 9 07-10 .37

நல்லநேரம்-3.07-4.37

**மேடம்**

கோபப்படுதல், சயனசுகக் குறைவு, முயற்சிதாமதம்,சுப செலவு.

**இடபம்**

கௌரவமான நிலை, குடும்பசுகம், நல்ல செய்தி, எண்ணங்கள் நிறைவேறும்.

**மிதுனம்**

மற்றவர்களின் உதவி, சுப நிகழ்ச்சி,முயற்சி கைகூடும். வாக்கு மேன்மை.

**கடகம்**

உடல் உழைப்பு, சகோதரர் உதவி, சிந்தனை மாற்றம், வீண் அச்சம்,

**சிங்கம்**

வீண்தொல்லை, நல்ல உணவுகிடைத்தல், வாகன பயம்,முயற்சிதாமதம்.

**கன்னி**

எதிர்பாராதநன்மை,களஸ்திரசுகம்,பிரயாணம், தடைப்பட்ட காரியம் கைகூடும்.

**துலாம்**

சுகவாழ்வு,தனவரவு, சத்துரு ஜெயம், முயற்சிகை கூடும்.

**விருச்சிகம்**

காரிய இடையூறு, புத்திரரால் கவலை, உறவினர் வருகை, திடீர்நன்மை.

**தனுசு**

ரோகபயம், முயற்சிதாமதம்,கல்வியில்ஆர்வம், உடல் சோர்வு.

**மகரம்**

அன்னியர் சந்திப்பு, இனிய அனுபவம், வாக்குமேன்மை, புதிய பொருள்சேர்க்கை.

**கும்பம்**

மாதர்உதவி, கௌரவக் குறைவு,பொருள் விரயம், முயற்சி தாமதம்.

**மீனம்**

பெரியோர் ஆசி, நல்ல முயற்சி,ஜனவசியம், போசன சுகம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# தமிழ் இன்ஸ்பெக்டர்கள் றிட் மனுத் தாக்கல்

(கொழும்பு)

பொலிஸ் இன்ஸ்பெக்டருக்கான பதவி உயர்வுப்பரீட்சைக்கு தமிழ் மொழியில் தோற்றிய உதவி இன்ஸ் பெக்டர்கள் றிட்மனு ஒன்றை மேல் முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளனர்.

தமிழ்மொழிமூலம்தோற்றிய இன்ஸ் பெக்டர்களுக்கான வினாத்தாள்கள் கையால் எழுதப்படிருந்ததுடன், அவற்றின் சொற் பிரயோகங்களும் தவறாக இருந்ததாக தமிழ்உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளனர்,

இம்மனு டிசெம்பர்மாதம் 4 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

(உ-8)

# ஜனாதிபதியின் கூற்றுக்கு மத்தியவங்கி முரண்

(கொழும்பு)

கடந்த செவ்வாயன்று நாட்டுமக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி, சம்பள ஆணைக்குழு சிபார்சு செய்திருந்த அதிகரிப்பின் அரைவாசியை அரசாங்கம் அரச ஊழியர்களுக்கு வழங்கவேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

அடுத்த 50 சதவீதத்தை 2004 ஆம் ஆண்டில் வழங்கலாம்என்றும் ஆலோசனை கூறியிருந்தார்.

ஆயினும், மத்தியவங்கி அதன் மிகப்பிந்திய வெளியீடான '2002ஆம் ஆண்டின் முக்கியசம்பவங்களும் 2003 ஆம் ஆண்டிற்கான வாய்ப்புக்களும்' என்னும் நூலில், அரசதுறையில் சம்பள அதிகரிப்பு சாத்தியமானதல்ல இன்றைய பொருளாதார சூழ்நிலையில் புத்திசாலித்தனமானதுமல்ல என்று தெரிவித்திருக்கிறது.

மேலும், 2001 ஒக்டோபரில் சம்பளஅதிகரிப்பைபெற்ற அரசதுறை உயர்ந்தஒரு சம்பளத்தை இப்போதும் பெறுகிறது. நிறைவேற்றுத்தரங்களுக்கு குறைவான ஆசிரியர்கள்உட்பட அரசஊழியர்கள் நியாயமான சம்பளத்தையே பெற்றிருக்கின்றனர் என குறிப்பிட்டுள்ளது.

(உ)

# பாடசாலை தவணை அட்டவணை வெளியீடு

(கொழும்பு)

2003 ஆம் ஆண்டிற்கான பாடசாலைத் தவணை அட்டவணை பாடசாலைக் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையின் சகல பாடசாலைகளும் வருடத்தில் 210 நாள்கள் நடைபெற வேண்டுமென வரையறுக்கப்பட்டுள்ளபோதிலும், 2003 ஆம் வருடத்தில் வரும் அரசாங்க விடுமுறை தினங்களை கருத்தில் கொண்டு 193 நாள்களே பாடசாலைகளை நடத்தக் கூடியதாக உள்ளது என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி தமிழ், சிங்கள பாடசாலைகள் ஜனவரி முதலாம் திகதி முதல் ஏப்ரல் 10 ஆம் திகதி வரை முதலாம் தவணைக்காகவும் மே மாதம் 19 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 8 ஆம் திகதிவரை இரண்டாம் தவணைக்காகவும் ஒகஸ்ட் 25 ஆம் திகதி முதல் நவம்பர் 28 ஆம் திகதி வரை 3 ஆம் தவணைக்காகவும் திறந்திருக்கும் என அமைச்சினால் வெளியிடப்பட்ட பாடசாலைத் தவணை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ-8)

# தகவல் திணைக்களத்தை ஒழித்துக்கட்ட திட்டம்

## அமைச்சர் இம்தியாசுக்கு கடிதம்

(கொழும்பு)

அரசாங்க தகவல் திணைக்களத்தை ஒழித்து கட்டுவதற்கு அரசு திட்டம் தீட்டி வருகிறது.

இவ்வாறு ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரிற்கு பாராளுமன்ற உறுப்பினர் அனுரா பிரியதர்சன யாப்பா எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது;

இத்திணைக்களத்தில் உள்ள வளங்கள் யாவும் பிரதமரின் ஊடகப்பிரிவிற்கு வழங்கி இத்திணைக்களத்தை மூடிவிட அரசு திட்டம் தீட்டியுள்ளது.

இலங்கை அரசிற்கும் தகவல்களைச் சேகரித்து வழங்குவது மட்டும் பிரசாரம் செய்தல்ஆகியவற்றில் இத்திணைக்களம் ஆற்றிய பணியை பிரதமர் பெரிதும் பாராட்டியுள்ளார்.

எனவேதான் ஐக்கிய தேசிய முன்னணியின் பிரசார நடவடிக்கைகளுக்கு உரிய ஊடகப் பிரிவுடன் இத்திணைக்களத்தை இணைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக நாம் கருதுகிறோம்.

முன்னைய ஆட்சிக் காலத்தில் இத்திணைக்களத்தை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதையும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்திணைக்களத்தை ஒழித்துக்கட்டும் நடவடிக்கையை தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்

(உ-10)

# அரசாங்கம் ஒரு நூலில் தொங்குகிறது

## கத்தரிக்கும் வல்லமை ஜனாதிபதிக்கு உண்டு

### அக்காவின் அதிகாரத்தை பறைசாற்றுகிறார் அனுரா

(கொழும்பு)

ஜனாதிபதிக்கெதிரான நடவடிக்கைகளில் அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தொடர்ந்தும் ஈடுபட்டுவருவாராயின் அவரது அமைச்சரவைப் பதவிகளை எனது சகோதரி இரத்துச் செய்துவிடுவார் என்பதை பீரிஸ் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று, முன்னாள் சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்க எச்சரித்துள்ளார்.

ஜனாதிபதியை பதவி நீக்குவதற்குரிய மாற்று வழிகள் பற்றி அமைச்சர் பீரிஸ், புலிகளுக்குக் கூறிவருவதாகத் தான் அறிந்துள்ளதாகத் தெரிவித்துள்ள அனுரா பண்டாரநாயக்க, இந்த விளையாட்டுகள் தொடருமானால் அமைச்சர் பீரிஸ் அவர் வகிக்கும் சகல பதவிகளிலுமிருந்தும் அகற்றப்படுவார் எனத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நிறைவேற்று அதிகாரங்களைக் குறைப்பது, பாராளுமன்றத்தைக் கலைப்பது போன்றவை தொடர்பாக விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் வழங்கும் கருத்துக்களை அரசாங்கம் ஆலோசனைக்கெடுத்து வருகின்றது. ஆனால் அரசாங்கம் ஒரு நூலில் தொங்கிக்கொண்டிருக்கிறது. ஜனாதிபதியின் கையில்தான் கத்தரிக்கோல் இருக்கிறது என்றார். (இ)

### மிதிவெடியில் சிக்கி சிறுவன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பற்றையைத் துப்புரவு செய்துகொண்டிருந்த வேளை, புதைந்திருந்த மிதிவெடி வெடித்ததில் படுகாயமடைந்த சிறுவன் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

ஏழாலை கிழக்கில் கடந்த திங்களன்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த செ. தமிழ்ச்செல்வன் (வயது 16) என்பவரே படுகாயமடைந்தவராவார். (உ-6)

# இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில்

## மாவீரர்தினம் அனுஷ்டிக்க ஏற்பாடு

(வவுனியா)

வவுனியா இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இம்முறை முதன்முறையாக மாவீரர் தினம் உணர்வெழுச்சியுடன் கொண்டாடப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மாவீரர்தினத்தை முன்னிட்டு வவுனியா ஈச்சங்குளத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லம் தற்போது புனரமைக்கப்பட்டுவருகிறது.

பொதுமக்கள் தினமும் இம் மாவீரர் துயிலும் இல்லத்தைச் சிரமதானம் மூலம் புனரமைப்புச் செய்து வருகின்றார்கள். சுமார் 800 கல்லறைகள் உள்ள இம் மாவீரர் துயிலும் இல்லமானது மாவீரர் தினக் கொண்டாட்டங்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன் புனரமைக்கப்பட்டு விடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் நடைபெறவுள்ள இம் மாவீரர் தினத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே பிரபாகரன் 27 ஆம் திகதி மாலை ஆற்றவுள்ள உரை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் சமாதானத்தை வலியுறுத்துவதாகவும் அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தலைவர் வே. பிரபாகரனின் இந்த மாவீரர் தின உரையில் தனியார் வானொலி, தொலைக் காட்சிகள் நேரடியாக ஒலி, ஒளிபரப்பவும், ஏற்பாடுகள் செய்து வருகின்றன.

இம்முறை மாவீரர்தினத்தில் 17 ஆயிரத்து 648 மாவீரர்களுக்கும் மக்கள் அஞ்சலி செலுத்தவுள்ளனர்.

17 ஆயிரத்து 648 மாவீரர்களில், 13 ஆயிரத்து 882 ஆண் மாவீரர்களும், 3 ஆயிரத்து 766 பெண் மாவீரர்களும் 241 கரும் புலிகளும் அடங்குவர். (ம)

### மலசல கூட அமைப்பு வேலைகள் பூர்த்தி

(மந்திகை)

யுனிசெவ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலர் பிரிவில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 50 குடும்பங்களுக்கென அமைக்கப்பட்டு வந்த மலசல கூட அமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கரவெட்டி மேற்கில் 22 குடும்பங்களும் கரவெட்டி வடக்கில் 19 குடும்பங்களும் கரணவாய் கிழக்கில் 9 குடும்பங்களும் இத்திட்டத்தின் பயனாளிகளாகும். (உ-245, 23)

### போலி நோட்டுக்கள் பொலிஸாரால் மீட்பு

(புத்தளம்)

போலி ஆயிரம் ரூபா நோட்டுக்களை வைத்திருந்த நபர் ஒருவரை நொச்சியாகம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபரிடம் இருந்து போலி ஆயிரம் ரூபா நோட்டுக்கள் நான்கைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன், மேற்படி நபரிடம் விசாரணையை மேற்கொண்டுள்ள பொலிஸார் புத்தளம் பகுதியில் இருந்து 26 போலி நோட்டுக்களைக் கைப்பற்றியுள்ளனர். (உ-10)

### கணனி நிலையத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சங்க ஆதரவில் இலவச கணனி நிலையத் திறப்புவிழா இன்று மு.ப. 10.00 மணிக்கு வடமராட்சி கிழக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சங்க தலைவர் மு. அழகராசா தலைமையில் குடத்தனை தென்னிந்தியத் திருச்சபை வளாகத்தில் நடைபெறவுள்ளது. (உ-3)

### சங்கானை ஆஸ்பத்திரியில் மீண்டும் பற்சிகிச்சை

(சங்கானை)

சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள வட்டுக்கோட்டை கிராமிய வைத்தியசாலையில் எதிர் வரும் 20 ஆம் திகதி புதன் கிழமை தொடக்கம் ஒவ்வொரு புதன்கிழமையும் பற்சிகிச்சைநிலையம் மீளஇயங்கவுள்ளது.

யாழ் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் பல் வைத்திய நிபுணர் திருமதி ச. ஞானேஸ்வரன் இத்தினங்களில் நடைபெறும் பற்சிகிச்சையினை மேற்கொள்ளவுள்ளார்.

இதேவேளை இப்பகுதியில் உள்ள பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பல் நோய்களுக்கு சிகிச்சை பெறுவதன் பொருட்டு யாழ் போதனா வைத்தியசாலையை இற்றைவரை நாடி வந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-252)

### தமிழ்-முஸ்லிம் நல்லுறவை ஏற்படுத்தும் பயிற்சிப் பட்டறை

(மட்டக்களப்பு)

வடக்கு-கிழக்கு தமிழ் முஸ்லிம் இனங்களிற்கிடையே நல்லுறவை ஏற்படுத்தி அமைதிச் சூழலை உருவாக்குவது தொடர்பான விசேட பயிற்சிப் பட்டறை இன்று அக்கரைப்பற்று பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

களுத்துறை-டயறியா அரச சார்பற்ற அமைப்பும், கல்முனை மனித நேயத்திற்கும் சமாதானத்திற்குமான அமைப்பும் ஒருங்கிணைந்து இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

இந்நிகழ்வில், அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ஏ. அப்பதுல் மஜித் தலைமையில் நடைபெறும் இப்பயிற்சிப் பட்டறையில் அரச உயர் அதிகாரிகளும், பிரதேச முக்கியஸ்தர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-10)

### இடமாற்றம் வேண்டாம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி மாவட்ட அரசினர் வைத்திய சாலையின் பொறுப்பதிகாரியாகப் பணியாற்றி வரும் டாக்டர் அம்பிகைபாகனை அங்கிருந்து இடமாற்றம் செய்ய வேண்டாம் எனக்கோரி சாவகச்சேரி நகர மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் திருகோணமலையிலுள்ள மாகாண சுகாதாரப் பணிப்பாளருக்கு மகஜர் ஒன்றினை அனுப்பியுள்ளது. (உ-77)

### நகரப்பகுதி நடைபாதை வியாபாரிகளுக்கு திங்கள் வரை அவகாசம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைக்குச் சொந்தமான யாழ் நவீன சந்தைக்கட்டடக் கடைகளின் முன்பக்கபகுதியிலும் நடைபாதைப் பகுதியிலும் பொருட்களைக் காட்சிக்காகவும் விற்பனைக்காகவும் வைத்திருப்பதனால் பொதுமக்களுக்குபெரிதும் இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன.

இதனால் அவற்றை உடன் அகற்றி ஒத்துழைப்பு வழங்குமாறும் அப்படிச் செய்யாதவிடத்து எதிர்வரும் 18 ஆந் திகதி திங்கட்கிழமைக்குபின் அவ்விடங்களில் வைக்கப்பட்டிருக்கும் பொருட்கள் யாவும்சபையால் பொறுப்பேற்கப்பட்டு உரிய நடவடிக்கை மேற் கொள்ளப்படும். இவ்வாறுயாழ் மாநகர சபை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

எனவே வர்த்தகர்கள் யாவரும் மாநகரசபையின் அறிவுறுத்தல்களை ஏற்று பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென யாழ் வணிகர் கழகம் கேட்டுள்ளது. (உ)

### முஸ்லிம் காங்கிரசிற்குள் முரண்பாடு கிடையாது

#### தேசிய அமைப்பாளர் மறுப்பு

(கொழும்பு)

தமது கட்சிக்குள் பிளவுகள் எதுவும் இல்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தேசிய அமைப்பாளர் கே.ஏ. பாயிஸ் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்டமைப்பினை ஒருபோதும் மாற்றி அமைக்க முடியாது என்றும் முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் முஸ்லிம் நாடாளுமன்ற குழுவின் தலைவராக ரவூப் ஹக்கீம் மட்டுமே இருப்பார் எனவும் அவர் தெரிவித்தார்.

முஸ்லிம்களின் உரிமைகளை நிலை நாட்டுவதற்காகவே நாடாளுமன்றப் பகிஷ்கரிப்புப் போராட்டம் இடம் பெற்றது.

சுயநலத்திற்காகவும் அதிகார ஆசைக்காகவும் சிலர் தவறாக பயன்படுத்த முனைந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பகிஷ்கரிப்பை கைவிட்டு நேற்று முன்தினம் பாராளுமன்றிற்கு சமுகமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

### 15 கிராம அலுவலர்களுக்கு வெற்றிடம்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவில் மொத்தமாகவுள்ள 60 கிராம சேவையாளர் பிரிவுகளில் 15 பிரிவுகளுக்கான கிராமசேவையாளர்கள் பதவிகள் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் இருந்து வருகின்றன.

இப்பிரிவுகளுக்கான பதில் கடமைகளை ஏனைய பிரிவுகளைச் சேர்ந்த கிராமசேவையாளர்களே மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த 15 பிரிவுகளில் கிராம சேவையாளர்களாகப் பணிபுரிந்தோர் பல்வேறுகாரணங்களின் நிமித்தம் தமது பதவிகளைத்துறந்து சென்றுள்ளனர். (உ-77)

### முகாம்களில் தங்கியுள்ள மக்களின் மனித உரிமை பாதுகாத்தல் திட்டம்

(யாழ்ப்பாணம்)

கடந்த கால யுத்த அனர்த்தங்களினால் குடாநாட்டில் இருந்துஇடம் பெயர்ந்து பல்வேறு பிரதேசங்களிலும் உள்ள நலன்புரி முகாம்களில் வாழ்ந்துவரும்மக்களின்மனித உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் அவர்களின் உண்மை நிலைமையை அறியும் வகையில் மனித உரிமை ஆணைக்குழு புதிய பலதிட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இந்த வகையில் இடம் பெயர்ந்த மக்களின் மனித உரிமை சார்ந்த வினாக்கொத்துக்களை தயாரித்து நலன்புரி முகாம்களுக்குநேரில் சென்று விநியோகிக்கவுள்ளதாக யாழ் உள்ளூர் இடம் பெயர்ந்தவர்களின் மனித உரிமைகளுக்கு பொறுப்பான அதிகாரி வெ. வேழினி தெரிவித்தார்.


இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் அடிப்படை வசதிகள் அற்றநிலையில் வாழும் குடும்பங்களின்மனித உரிமைக்கு எந்த வகையில் பாதகம் ஏற்படுகிறது என்ற உண்மை நிலைவரத்தை அறிந்து அவை தடுக்கப்படும் எனவும்,

சிறுவர் பெண்கள் ஆகியோரிடத்தில் முக்கியமாக இவ் வினாக்கொத்து விநியோகிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-6)

# வெளிநாட்டு வைத்தியர்கள் செய்யும் சேவை வசதி குறைந்த மாவட்டங்களுக்கே உகந்தது

பல தியாகங்களுக்கு மத்தியில் எமது சேவைகள் இடம் பெற்றுக் கொண்டு இருக்கிறது. ஒரு கணம் கூட ஓயாமல் இரவு பகல் பாராமல் மக்களுக்கு மனிதத்துவத்துடன் அன்பு காட்டி, அவர்களின் நோய்களுக்குச்சிகிச்சை அளித்துக்கொண்டு இருப்பவர்கள் எமது வைத்தியர்கள்.

யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் எஸ்.சதுர்முகன் வலம்புரிப்பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியின் தொகுப்பு இங்கே தரப்படுகின்றது.



கேள்வி : வணக்கம்

பதில் : புன்னகை பூத்த முகத்தில் சிரிப்புடன் வணக்கம்! என்றார்.

கேள்வி : யாழ் குடா நாட்டு மக்களுக்கு மிகுந்த ஆசையுடன் சேவையாற்றி வரும் யாழ். போதனா வைத்தியசாலையானது சமாதான சூழ்நிலைகளில் தென்பகுதிகளில் உள்ள ஏனைய வைத்தியசாலைகள் போன்று யாழ்.போதனா வைத்தியசாலையையும் கொண்டு வர முடியும் என்ற நம்பிக்கை இருக்கின்றதா?

பதில் : நிச்சயமாக எங்களால் முடியும். அதாவது இந்த வைத்தியசாலையானது பல சேவைகளை வழங்கிக்கொண்டு வருகின்றது. இந்த சேவைகளை அர்ப்பணிப்புகள், தியாகங்கள் மத்தியில் சேவைகளை இடம்பெற்று வருகின்றது. இந்த சமாதான காலத்தில் நாங்கள் இப்பொழுது பல திட்டங்கள் தீட்டப்பட்டு அதனை நடைமுறைப் படுத்திக் கொண்டு வருகின்றோம்! இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படும் பட்சத்தில் கட்டாயமாக தென்பகுதிகளில் உள்ள கண்டி, ஜெயவர்த்தனபுர போதனா வைத்தியசாலைகள் போன்று கொண்டுவர முடியும், வரவேண்டும் என்பதே எனது விருப்பம்.

கேள்வி : யாழ்.போதனா வைத்திய சாலையில் மேல் உயர்த்தி "லிப்டஸ்" வசதிகள் செய்யப்படவுள்ளதாக அறிகிறோம் அதன் வேலைத்திட்டங்கள் எவ்வாறு இருக்கிறது?

பதில் : கடந்த போர் அனர்த்தங்களின்காரணமாக பல கட்டிடங்கள் இடிந்து காணப்படுகின்றது. அத்துடன் பழைய கட்டிடங்களும் எமது வைத்திய சாலையில் காணப்படுகிறது. இக்கட்டடங்கள் புனரமைப்புச் செய்யப்படுகின்றன. இந்த வேலைத்திட்டங்கள் முடிவடைந்ததும் எந்த எந்த இடங்களில் "லிப்ட்ஸ்" தேவைப்படுகின்றதோ அதனைப் பொருத்துவதற்கு உள்ளோம். நோயாளர்களின் போக்குவரத்துப் பிரச்சினைக்கு இத்திட்டம் சிறந்தது.

கேள்வி : கண்டி வீதி திறக்கப்பட்டதும் வெளிமாவட்ட வெளிநோயாளர்கள் படை எடுத்துக் கொண்டு வந்த வண்ணமாக இருக்கிறார்கள இந்த வகையில் உங்களால் எந்த ளவு தூரம் வெளி நோயாளர்களுக்கு சேவையாற்ற முடிகிறது?

பதில் : இதில் என்ன இருக்கிறது எமது வைத்தியசாலையில் வெளி நோயாளர் பிரிவுக்கான கட்டட வசதிகள் போதியளவு இல்லை! ஆனாலும் இருக்கின்ற எமது வளங்களைக் கொண்டு எங்களால் முடிந்த அளவு அவர்களுக்குச் சேவையாற்றிக் கொண்டு வருகின்றோம்.

கட்டட வசதிகள் இல்லாத நிலை, கட்டில்கள் கூட பற்றாக்குறையாக இருக்கின்றது. இதனால் நோயாளர்களுக்கு "பாய்கள்" கொடுத்து அவர்களுக்குப் படுக்க வைக்கிறோம் எம்மிடம் உள்ள வளங்கள் அனைத்தையும் பயன்படுத்திச் சிறந்த வைத்திய சேவையினை வெளிநோயாளர்களுக்கு ஆற்றி வருகின்றோம்!

கேள்வி : யாழ்போதனா வைத்திய சாலையில் அண்மையில் நோயாளர்களின் அளவு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகின்றது! இதன் காரணமாக போதிய ஆளணிப்பற்றாக்குறைகள் ஏற்பட்டுள்ளது என அறிந்தோம்! தற்போது இப்பிரச்சினைக்கு தீர்வு காணப் பட்டுள்ளதா?

பதில் : எந்த நிறுவனங்களை எடுத்துக் கொண்டாலும் ஆளணிப் பிரச்சனைகள் இல்லாமல் இல்லை அதேபோன்று எமது வைத்திய சாலையிலும ஆளணிப்பற்றாக் குறையினைப் பொறுத்தவரை எல்லா வைத்தியப் பிரிவுக்கும் போதிய ஆளணி இல்லாமல் இருக்கின்றது. வைத்திய நிபுணர்கள், தாதி உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், எனப் பல ஆளணிப் பற்றாக்குறை காணப்படுகிறது. இருந்தும் எங்களால் இயன்ற அளவுக்குச் சேவையாற்றி வருகின்றோம்.

கேள்வி : இப்பொழுது வைத்திய சாலைக்குப் புதிய நோய்கள் உள்ள நோயாளர்கள் சிகிச்சை பெறுகின்றார்களா?

பதில் : புதிய நோய்கள் என்று சொல்லக் கூடியவகையில் எதுவும் வருவதில்லை குறிப்பாக எயிட்ஸ், கொலரா போன்ற நோயாளர்கள் உள்ளார்கள் சிகிச்சை பெறுவதற்காக வருகின்றர்கள் இவை புதிய நோய்கள் என்று சொல்வதற்கு இல்லை.

கேள்வி :வெளிநோயாளர் பிரிவுக்கென புதியகட்டிடங்கள் கட்டுவதற்கு ஏதும் நடவடிக்கை எடுத்துள்ளீர்களா?

பதில் : நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் வருகின்றோம். இடவசதியீனங்களினாலும் முன்னர் இருந்ததைவிட தற்பொழுது அதிகமான வெளிநோயாளர்கள் வைத்தியசாலை விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறுபவர்களும் அதிகரித்துள்ளனர். மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் இருந்தும் அதிகமானவர்கள் சிகிச்சை பெற வருகின்றார்கள் இதனால் முன்னர் இருந்ததை விட சிகிச்சை பெறுபவர்கள் அதிகரித்துள்ளனர்.

அத்துடன் மந்திகை, ஊர்காவற்றுறை, தெல்லிப்பளை, சாவகச்சேரி போன்ற இடங்களில் உள்ள ஆதார வைத்திய சாலைகளில் போதிய அளவு வசதியின்மையும் இவ்வாறு நோயாளர்கள் அதிகரித்தமைக்குக் காரணம் எனவே புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கின்றோம். எனத் தெரிவித்தார்.



கேள்வி : வெளிநாட்டில் இருந்து கண்சிகிச்சை போன்ற நோய்களுக்கும் மற்றும் ஏனைய நோய்களுக்கும் சிகிச்சை அளிப்பதற்கு வருகின்றார்கள் அவர்கள் பற்றி?

பதில் : வெளிநாடுகளில் இருந்து சிகிச்சை அளிப்பதற்கு வரும் வைத்தியர்களை நாம் வரவேற்கின்றோம். ஆனால் அவர்களுடைய சேவையை நாங்கள் பெரிய அளவில் எதிர்பார்க்கவில்லை எங்களிடம் அதற்குரிய வைத்திய நிபுணர்கள் இருக்கின்றார்கள்.

அவர்கள் மூலம் நாங்கள் இவற்றை நிறைவேற்றுவோம். வெளிநாடுகளில் இருந்து வரும் வைத்தியர்கள் போதிய வசதிகள் இல்லாத கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் இவர்களுடைய சேவை இடம் பெற்றால் பெரிய ,உதவியாக இருக்கும் என நினைக்கின்றேன் என்றார்!!!

கேள்வி : தங்கள் வைத்தியசாலையில் கல்விகற்றுக் கொண்டு இருக்கும் வைத்திய மாணவர்கள் பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?

பதில் : உண்மையில் மருத்துவ சேவை என்பது மகத்தான சேவை இந்த துறைக்குள் வந்தவர்கள் கூடிய அளவு தம்மை முழுமையாக அர்ப்பணித்து செயற்பட வேண்டியவர்கள். பதவி புகழ் என்ற நிலையில் நின்று கொண்டாலும் மக்களுக்கு தங்களால் இயன்ற ளவு கூடிய பிரயாசை எடுத்து அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேணடும் செயலாற்றுவார்கள் என நம்புகிறேன்...?

கேள்வி : தங்களுடைய வைத்திய சாலையில் கல்வி கற்கும் மருத்துவ மாணவாகள் அத்துறையில் போதிய நிபுணத்துவம் அடைந்தவர்களை போதிய வைத்தியர்கள் இல்லாத மாவட்டங்களுக்கு அனுப்பி வைப்பதுண்டா?

பதில் : வெளி மாவட்டங்களுக்கு சேவையாற்றுவதற்கு எமது வைத்தியர்கள் தயாராக இருக்கின்றார்கள் சந்தர்ப்பம வரும் போது சரியானவர்களை சரியான இடங்களுக்கு அனுப்பி சேவையாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

கேள்வி : யாழ் போதனா வைத்திய சாலையில் போதனைகளைக் கற்றுக் கொண்டவைத்தியர்கள் ஏன் வெளி நாடு சென்று சேவையாற்ற விரும்புகின்றார்கள்?

**நேர்காணல்:**
**ஜெ. டானியல்**
**கை. ஜெயகாந்தன்**

பதில் : இது தொடர்பாக எனக்கு ஒன்றும் தெரியாது! அவ்வாறு சேவையாற்ற விரும்புகிறவர்களை .எமது போதனா வைத்தியசாலையில் இருக்க முடியாது என நினைக்கிறேன்.

கேள்வி: யாழ். குடாநாட்டு மக்களுக்கு சேவையாற்றி வரும் தங்கள் வைத்தியசாலையைப் பற்றி என்ன கூற நினைக்கிறீர்கள்?

பதில் : சொல்வதற்கு என்ன இருக்கிறது. இது யாழ்.குடா நாட்டு மக்களுக்கு மட்டுமின்றி அனைத்துலக மக்களுக்கும் சேவை யாற்ற வேண்டும் என்ற விருப்பம் எனக்குண்டு.

யாழ் குடாநாட்டிற்கு முழுவதுமே எங்களுடைய வைத்திய சாலை மிக முக்கியமான பெரிய வைத்தியசாலை. இவ் வைத்திய சாலைக்கு பல உதவிகள் தேவைப்படுகின்றன. இவற்றுக்கு உதவி வழங்குபவர்கள் உதவி வழங்கும் நாடுகள் எங்களுக்கு உதவி செய்ய முன்வர வேண்டும்.

அப்பொழுதுதான் ஏனைய தென்பகுதியில் உள்ள கண்டி, ஜெயவர்த்தனபுரம் போன்ற போதனா வைத்தியசாலைகளைப் போன்று எமது வைத்தியசாலையும் வரும், அத்துடன் மற்றைய இடங்களில் அமைந்துள்ள ஆதாரவைத்தியசாலைகள், அதற்குரிய விசேட வைத்திய நிபுணர்கள் அளிப்பதன் மூலம் அந்த ஏனைய வைததியசாலைகளின் தேவைகளை நிறைவு செய்யமுடியும்' என நம்புகின்றேன்.

## எயிட்ஸ் கருத்தரங்கு

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் இன்று மு.ப.10மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் எயிட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.பரராஜசேகரம் தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெறவுள்ளது (உ-7)

## உள்ளூராட்சி நிறுவனங்களின் மாநாடு

(கொழும்பு)

ஆசிய பசுபிக் பிராந்திய உள்ளூராட்சி நிறுவனங்களின் நிறைவேற்றுக் குழுக்களின் மாநாடு எதிர்வரும் 18,19ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

கொழும்பு மாநகரசபையும் யுனெஸ்கோ நிறுவனமும இணைந்து இம்மாநாட்டை நடத்தவுள்ளன.

இம்மாநாட்டில் இந்தியா, பங்களாதேஷ், யப்பான், கொரியா, மலேசியா உட்பட 14நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் உள்ள நாடுகளின் உள்ளூராட்சி சபைகளுக்கிடையில் பரஸ்பர ஒத்துழைப்பை விஸ்தரிப்பதே இம்மாநாட்டின் நோக்கமாகும். (உ-8)

## அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்தம் பௌர்ணமி தினத்தில் நடத்திவரும் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல மற்றும் பன்னிருதிருமுறைப் பாராயணம் ஆகியன எதிர்வரும் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8மணிக்கு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் மன்றத்தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது (உ-10)

## நுளம்பு வலைகள் விநியோகம்

(மானிப்பாய்)

மானிப்பாய், சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை சங்கானை, வட்டுக்கோட்டை, அராலி, சுழிபுரம் மூளாய் ஆகிய பகுதியில் உள்ள மக்களிற்கும், எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை ஆனைக்கோட்டை, மானிப்பாய், நவாலி, சுதுமலை, சண்டிலிப்பாய் பண்டத்தரிப்பு, மாதகல், இளவாலை பகுதிகளுக்கும் நுளம்பு வலைகள் விநியோகிக்கப்படவுள்ளதாக மானிப்பாய் - சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். கே.கணேஸ்வரராஜா அறிவித்துள்ளார்.

அத்துடன், நுளம்பு வலைகளைப் பெறுவோர் சுகாதார சேவை வெளிக்கள உத்தியோகத்தரின் சிபார்சுக் கடிதம், குழந்தை வளர்ச்சிப்பதிவேட்டு அட்டை அல்லது கர்ப்பவதி அட்டை, மீளக்குடியமர்ந்த அத்தாட்சிப்படுத்திய பங்கீட்டு அட்டை, தேசிய அடையாள அட்டை ஆகிய ஆவங்களை வரும் போது தவறாது கொண்டு வரும்படி கேட்டுள்ளார். (உ-20)

## கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லை ஆதீன ஓதுவார் மூர்த்திகளில் ஒருவரும் அகில இலங்கைத் திருமுறை மன்ற அமைப்பாளருமான சி. கிருஷ்ணமூர்த்தி ந.வே. அண்ணாமலை அவர்களின் புதல்வன் அ,செந்தூர்வாசன் அவர்களால் அண்மையில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். (உ-10)



கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடாத்தப்பட்ட 18வயதுக்குட்பட்ட மைலோக்கின்னை உதைபந்தாட்டப் போட்டியில் யாழ். இந்துக்கல்லூரி அணியுடன் மோதி வெற்றியீட்டி யாழ். மாவட்ட சாம்பியனான தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியுடன் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்ட லயன்ஸ் கழக 306B மாவட்ட ஆளுநர் லயன் O'REGION PINGHE. MJF அவர்களுடன், .கோப்பாய் லயன்ஸ்கழகத் தலைவரும். யாழ். மத்தியகல்லூரி அதிபருமான க.இராசதுரை, முகத்துவாரம் லயன்ஸ் கழகத் தலைவர் M.L.ஸ்ரீகாந், இணைப்பாளர் திரு B.S. மகேந்திரன் மற்றும் நடுவர்களுடன் பயிற்றுநர் திரு. எஸ்.எச்.கே. முகைதீன் அவர்களும் படத்தில் காணப்படுகின்றார்கள்.

## சமாதான நீதிவானாக நியமனம்



கரம்பொன் ஊர்காவற்றுறையைச சேர்ந்த காலஞ்சென்ற திரு.திருமதி ஜேம்ஸ செல்வராணி தம்பதிகளின் புதல்வன **ஜேம்ஸ் பிரான்ஸிஸ் சேவியர்** அவர்கள் நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட நீதிமன்ற பதில் நீதிபதி திருமதி சரோஜினிதேவி இளங்கோவன் .முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம . செய்து கொண்டார்.

புங்குடுதீவு கிழக்குக் கிராம அலுவலராக கடமைபுரியும் இவர், திறந்த பல்கலைக்கழக சட்டமாணி மாணவன் என்பதும்குறிபிடத்தக்கது.

# பண்டைய தமிழ் இலக்கியத்தின் புலமை எழுத்தாளப்பட வேண்டும்

## துணைவேந்தர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஈழத்து நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சி பற்றிய கருத்தரங்கில் கலந்து கொண்டிருக்கும் நாங்கள், நீண்ட நெடுங் காலமாகப் பேணிவந்த தமிழ் இலக்கியத்தை எழுதவேண்டும் இற்றைக்கு 2 ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கு முன் இருந்த தமிழ் இலக்கியத்தின் புலமையினை தமிழ் எழுத்தாளர்கள் எடுத்தாள வேண்டும் இதுவே எனது அவா!

இலங்கைக் கலைக் கழகமும் தமிழ் இலக்கிய குழுவும் நடத்தும் ஈழத்து நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சி பற்றிய கருத்தரங்கில் பிரதமவிருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்.பல்கலைகழக துணை வேந்தர் பொ.பால சுந்தரம்பிள்ளை இவ்வாறு தெரிவித்தார்.

யாழ் பல்கலைகழகத்தின் கைலாச பதியரங்கில் நடைபெற்றமேற்படி கருத்தரங்கின் முதல்நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு மேலும் உரையாற்றுகையில்;

ஈழத்து நவீன தமிழ் இலக்கியம் கடந்தபல ஆண்டுகளுக்கு முன்பே பேசப்பட்டு வந்த ஒன்றாகும் 1960 களில் பேராதனைப் பல்கலைகழகத்தில் இப்பாடத்திட்டம் நடைமுறைக்கு கொண்டுவந்தது முதல் பல்கலைக்கழகங்களின் தமிழ்த்துறைபெரிய இடத்தை பிடித்துள்ளது.

இதேவேளை, நவீன இலக்கியம், நாவல், சிறுகதை, கவிதை பழம் தமிழ் இலக்கியம் என பல்வேறு விடயங்களை உள்ளடக்கி விளக்கமாக விரிவுரை செய்யப்பட்டு வருகின்றது.

அதாவது, யாழ்.பல்கலைகழகம் மாத்திரம் அல்ல பேராதனை பல்கலைக்கழகம் கிழக்கிலங்கை பல்கலைக்கழகம், தென் கிழக்கு பல்கலைக்கழகம், சப்பிரகமுவ பல்கலைக்கழகம் ஆகியவற்றின் தமிழ்துறையில் இவை ஆராயப்பட்டு வருகின்றன.

பல்கலைக்கழகங்கள் மட்டத்தில் ஒரு பெரிய கவலை உண்டு. கொழும்பு பல்கலைகழகத்தில் ஈழத்து தமிழ் இலக்கியம் என்ற விடயம் இதுவரை காலமும்நடைபெறவில்லை.

தலைநகரில்அதுவும் சனத்தொகை அதிகரித்த இடத்தில் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் தமிழர்களாக இருந்தும் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைஇல்லை இதனை இயக்குவதற்கு எவ்வளவு முயற்சித்தும் முடியவில்லை, இது வோர்துரதிஷ்டவசம் தான்.

இன்று யாழ்ப்பாணத்தில் ஏராளமான எழுத்தாளர்கள் தமிழ் இலக்கியத்தை எழுதிக் கொண்டிருக்கிறார்கள். தமிழை வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

பத்திரிகைகள் வந்துகொண்டிருக்கின்றன; மக்கள் அன்றாடம் ஈழத்து இலக்கியத்தை அறிந்துகொண்டிருக்கிறார்கள். இதன் மூலம் தமிழ் வளர்ந்து கொண்டிருக்கின்றது. ஒல்லாந்தர் காலம், ஆங்கிலேயர் காலம், போர்த்துக்கேயர் காலம் தொடக்கம் இன்று வரைக்கும் வளர்ந்து வந்த தமிழ் இன்னமும் வளர வேண்டும் என்பதே தமது அவாவாகும் என்று குறிப்பிட்டார். (உ-7)

## படையினரின் முயற்சியை பொதுமக்கள் முறியடிப்பு

(மந்திகை)

பருத்தித்துறை கொட்டடி கரையோரப் பகுதியில் படையினர் மணல் ஏற்றுவதற்கு அங்குள்ள மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளமையினை அடுத்து தொடர்ந்து மணல் ஏற்றுவதை படையினர் நிறுத்தியுள்ளதாக தெரியவருகின்றது.

பருத்தித்துறை இராணுவ முகாம் காவலரண்கள் புனரமைப்பில் ஈடுபட்டுள்ள படையினர் கடந்த 12 ஆம் திகதி அருகில் உள்ள கொட்டடி கரையோர பகுதியில் மணல் ஏற்றி வந்தமையைக் கண்ட பொதுமக்கள் சிலர் ஒன்று கூடி அவர்களைத் தடுத்தனர் என்றும்,

இப்பகுதியில் தொடர்ச்சியாக மணல் ஏற்றுவதால் கடல்நீர் உட்புகும் அபாயம் ஏற்டும் என தெரிவித்த மக்களிடையேயும் படையினரிடையேயும் கருத்து முரண்பாடு ஏற்பட்ட போதிலும் பின்னர் படையினர் தொடர்ந்து மண் ஏற்றுவதை நிறுத்திக் கொண்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-23)

## வரவு-செலவுத்திட்ட குழுநிலைவிவாதம்ஆரம்பம்

(கொழும்பு)

வரவு-செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதம் நேற்று ஆரம்பமானது. எதிர் வரும் 10 ஆம்திகதி வரை இவ் விவாதம் நடைபெறவுள்ளது.

நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் நிலையியற் கட்டளைச் சட்டத்தை இரத்துச்செய்து வரவு-செலவுத்திட்டம்மீதான குழுநிலை விவாதத்லை நடத்துவதென முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் நீதிஅமைச்சர் வி. ஜ. மு. லொக்குபண்டார, நிதிஅமைச்சர் கே. என். சொக்ஸி, தொழில் வேலைவாய்ப்பு அமைச்சர் கே. என். மகிந்த சமரசிங்க, பிரதி செயற்குழுத்தலைவர் ஆந்ராகெனடி, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்தராஜ பக்ஷா, அனுராபண்டார நாயக்கா, ராஜா கொள்ளுறே, தினேஷ் குணவர்த்தன ஆகியோர்கலந்துகொண்டனர்.

இதேவேளை, வடக்கு-கிழக்குப் பாதுகாப்பு தொடர்பான விவாதத்தை டிசம்பர் மாதம் 9 ஆம் திகதி முதல் நடத்துவதற்கும் இக்கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது (உ-8)

## தமிழ் இலக்கிய வளர்ச்சி கருத்தரங்கில் இன்று...

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கலைக்கழகமும் தமிழ் இலங்கியக் குழுவும் இணைந்து கலாசாரத்திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடத்தி வரும் ஈழத்து நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சி பற்றிய கருத்தரங்கம் மற்றும் கலை நிகழ்வுகளின் இரண்டாம் நாளான இன்று,

காலை அமர்வு 9 மணிக்கு 'ஈழத்து நவீன தமிழ்க்கவிதை வளர்ச்சி' என்ற விடயத்தில் பேராசிரியர் சி. தில்லைநாதன் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.

இவ் விடயத்தில், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதி சி. சிவலிங்கராசா, பேராதனைப்பல்கலைக்கழகதமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எம். ஏ. நுஃமான், கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறை விரிவுரையாளர் கலாநிதி செ. யோகராசா ஆகியோரும்,

மலையகத் தமிழ்க்கவிதை பற்றி ஆய்வாளர் அன்ரனி ஜீவாவும், முஸ்லிம் சமூகத்தைப் பிரதிபலிக்கும் தமிழ்க் கவிதை பற்றி கவிஞர் மேமன் கவியும் ஆய்வுரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

கருத்துரையை கவிஞர் சோ.பத்மநாதன் ஆற்றுவார்.

மாலை அமர்வு பி.ப 1 மணிக்கு 'ஈழத்து நவீன தமிழ் நாடக வளர்ச்சி' என்ற விடயத்தில் கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் சி. மௌனகுரு தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.

இவ் விடயத்தில், யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி எஸ். சிதம்பரநாதன், யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக முதுநிலை விரிவுரையாளர் க. ஸ்ரீகணேசன் ஆகியோரும்,

மலையகத் தமிழ் நாடகம் பற்றி பத்தனை கல்வியியற் கல்லூரித் தலைவர் சு. முரளிதரனும் ஆய்வுரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

கருத்துரையை மூதறிஞர் சொக்கன் ஆற்றவுள்ளார்.

மாலை கலை நிகழ்ச்சிகள் போராசிரியர் நந்தி தலைமையில் இடம் பெறவுள்ளன. (உ)

## ஆசிரியர்களுக்கு தகவல் தொழில்நுட்ப செயலமர்வு

(மந்திகை)

வடமராட்சி கல்விவலய பாடசாலைகளில் உயர் தர வகுப்புக்களில் கல்விகற்பிக்கும் ஆசிரியர்களுக்கு தகவல் தொழில்நுட்பம் தொடர்பான செயலமர்வு நடைபெற்று வருகின்றது.

வடமராட்சி கல்விவலயமும் போரூட் நல்லொழுக்க நிறுவனமும் இணைந்து இப் பயிற்சி வகுப்புக்களை நடத்தி வருகின்றது.

சுமார் 35 ஆசிரியர்கள் இதில் பங்குபற்றி வருகின்றனர்.

க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்பம் தொடர்பானபாடம் சேர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (உ-23)

## மண்டையோடு மீட்ட இடத்தை நீதிபதி பார்வை

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டப்பகுதியில் வீட்டு வளவு ஒன்றினுள் மனித மண்டை ஓடு கண்டெடுக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து சாவகச்சேரி நீதிவான் அன்னலிங்கம் பிறேம் சங்கர் கடந்த புதனன்று சப்பவ இடத்தை நேரில் சென்று பார்வையிட்டார்.

மண்டை ஓடு மீட்கப்பட்ட பகுதியில் மனித எலும்புகளும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீட்கப்பட்ட மனித எச்சங்களில் எரியூட்டப்பட்ட அடையாளங்கள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

மீட்கப்பட்ட மனித எச்சங்கள் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டப் பகுதியில் 5 வயதுப் பாலகன் உட்பட 8 பேர் படையினரால் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைக்கு, மீட்கப்பட்ட தடயப் பொருட்களான சைக்கிள் மற்றும் மண்வெட்டி ஆகியன கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன. (த)

## அதிபர் பதவி விண்ணப்பம்

(மந்திகை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிய மு. ஸ்ரீபதி வலயத்திணைக்களத்திற்கு இடம் மாற்றப்பட்டுள்ளதை அடுத்து ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கே வலயத்திணைக்களத்தினால் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. (த-23,245)

## விபத்தில் காயம்

(நவக்கிரி)

ஆவரங்கால் பகுதியில் இடம்பெற்ற மினிபஸ்விபத்தில் வழிப்போக்கர்ஒருவர் காயமடைந்த நிலையில் அச்சுவேலி அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அச்சுவேலி பத்தமேனியைச் சேர்ந்த மு. நகேந்திரம் (வயது 43) என்பவரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார். (உ-233)

## நுளம்புவலை விநியோகம்

(காரைநகர்)

காரைநகர் பிரதேசத்தில் கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக நுளம்பு வலைகள் விநியோகிக்கப்படவுள்ளன.

வன்னியில் இருந்து ஏ - 9 பாதையூடாக மீளக்குடியமர்ந்த 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளைக் கொண்ட குடும்பத்தினருக்கே இவ் நுளம்பு வலை விநியோகிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-246)

## கூட்டுறவு ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பை அமுலாக்க வேண்டும்

### தொழிற்சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவு ஊழியர்தொழிற் சங்க பணியாளர்களால் தங்களுக்கு அனுப்பப்படும் மேன் முறையீடுகள் விசாரணை செய்யப்பட்டு தங்களால் வழங்கப்படும் தீர்ப்புக்களை நீண்ட நாட்களாகசம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் நடைமுறைக்கு கொண்டு வராததினால் பணியாளர்கள் மிகவும்இன்னலுறுகின்றனர்

ஆகவே, இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு தீர்ப்பை விரைந்து நடைமுறைப்படுத்த ஆவன செய்ய வேண்டும்.

யாழ். மாவட்ட கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம், கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பியுள்ள மகஜரில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

அம் மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது;

பணியாளர்களுக்கு தங்களால் வழங்கப்பட்ட சம்பள அதிகரிப்பு (31-99 சுற்று நிருபத்திற்கமைய) இது வரை வழங்காத சங்கங்களை சுற்று நிருபத்திற்கமைய உடன் வழங்க ஆவன செய்யவேண்டும்.

இடைக்கால கொடுப்பனவு 400 ரூபா, 1200 ரூபா என்பன இலாபமீட்டும் மாதங்களுக்கு மட்டும் வழங்கலாம் என்ற நடைமுறைக்கமைய இலாப மீட்டாத மாதங்களுக்கு கொடுப்பனவுவழங்கப்படுவதில்லை. ஆனால், நிதியாண்டு முடிவில் சங்கங்கள் இலாபமீட்டுவதாக தெரிய வருகின்றது.

தங்களால் அனுப்பப்படும் சுற்று நிருபங்கள் அனைத்தையும் எங்களுக்கும் அனுப்பி உதவுவாறு கேட்டுக் கொள்வதோடுஎங்களால்தங்களுக்கு அனுப்பப்படும்கடிதங்களுக்கு பதில் அனுப்பி உதவுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

சம்பள மீளாய்வு செய்யும் போது எமதுகருத்துக்களையும் ஆலோசனைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கடந்த 15 வருடங்களாக பணியாளர் பெயரில் சோர்வாக உள்ள இழப்பீட்டுத் தொகையை பணியாளர் பெயரில் இருந்து நீக்க அந்த அந்தச் சங்கங்கள் நடவடிக்கை எடுக்காமையினால் ஊழியர்கள் இழைப்பாறும் பொழுது அவர்களுடைய பணிக்கொடை பிணை போன்றவற்றினை பெறமுடியாதுள்ளமை அறியக் கூடியதாக உள்ளது. ஆகவே, இதனைக் கருத்திற்கொண்டு இதற்கான தீர்வினை மேற்கொள்ள வேண்டும்.

கூட்டுறவுப் பயிற்சிகொடுப்பனவு பற்றிய சுற்று நிருபம் வெவ்வேறு மாதிரி நடைமுறைப்படுத்துவதாக எமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது ஆகவே அச்சுற்று நிருபத்திற்கான விளக்கத்தினை எமக்கு தரவேண்டும்.

25 வருட சேவை முடிவுக்குப் பின் வழங்கப்படும்படியாகிய 750/= ரூபாசுற்றறிக்கை தெளிவின்மை காரணமாக சங்கங்கள் இப்படியை வழங்காது இழுத்தடிப்பு செய்கின்றன இதற்கான விளக்கத்தினை தந்துதவ வேண்டும்.

தங்களுடைய கிளை அலுவலகம் ஒன்று இங்கு அமைத்து பணியாளர்களின்பிரச்சினைகளை கையாளுமாறு கேட்டுக் கொள்கின்றேன் என்றுள்ளது. (உ)

தாமின்புறுவது உலகின் புறங்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்

குறள்

வலம்புரி

## அனுமதியில் மாற்றம் தேவை

பல்கலைக்கழகங்களில் பகிடிவதை மற்றும் வன்முறைகளில் ஈடுபடும் மாணவர்களுக்கான புலமைப் பரிசில்கள் ரத்துச் செய்யப்படும். இதற்கான சட்டவாக்கம் விரைவில் கொண்டுவரப்படுமென அமைச்சர் ரவி கருணாநாயக்கா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவன் ஒருவன் பகிடிவதை வன் செயலால் உயிரிழந்ததையடுத்து அமைச்சரின் அறிவிப்பு இவ்வாறு வெளியாகியுள்ளது.

நாட்டின் மனித மூலதனத்தை விருத்தி செய்வதில் பல்கலைக்கழகங்களுக்குப் பெரும்பங்குண்டு எனினும் இலங்கையைப் பொறுத்தவரை பல்கலைக்கழக அனுமதி என்பது வரையறைக்குட்படுத்தப்பட்டதாகவும், பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் அனுமதி தீர்மானிக்கப்படுவதாகவும் உள்ளது.

எனவே இங்கு மாணவரின் பரீட்சைப் பெறுபேறுகள் பல்கலைக்கழக அனுமதியைத் தீர்மானிக்கின்றனவே யொழிய, மாணவனின் ஒழுககம், அவனிடம் காணப்படும் தேசப்பற்று, மனிதாபிமான உணர்வு சமய, கலாசார விழுமியங்களை மதிக்கும் இயல்பு என்பன கணிக்கப்படுவதில்லை.

இதனால் சமுதாய சிந்தனைகளைப் பற்றிய உணர்வுகள் மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு வெளியே நிற்கும் போது மனிதப் பண்புகள் செம்மையாக விருத்தியடையாத வக்கிரஉணர்வு மிக்க சில மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குள் புகுந்து விடுகிறார்கள்.

இத்தகையதோர் சூழ்நிலையிலேயே பல்கலைக்கழகங்களில் வன் செயல்களும் பகிடிவதைகளும் தாண்டவமாடுகின்றன. இத்தகைய பகிடிவதை, வன்முறைகளை மகாபொலக் கொடுப்பனவுகளை நிறுத்திவிடுவதன மூலம் தடைசெய்துவிட முடியாது.

பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் வன் செயல்களுக்குக் காரணமான மாணவர்களை பல்கலைக்கழகத்திலிருந்து உடனடியாக வெளியேற்றும் போதே பல்கலைக்கழக வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

இது தொடர்பான சட்டங்களைக் கொண்டு வருவதன் மூலமே தொடரப்போகும் பல்கலைக்கழகப் பகிடிவதைகளைப் புதைக்காலம்.

# அத்தியாரின் கல்வித்தொண்டு இந்துக்கல்லூரி
# அன்னாரின் நினைவுமலர் வரலாற்று ஆவணம்

'எல்லா விளக்கும் விளக்கல்ல மாந்தர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு'

இது திருக்குறள் பொய்யா விளக்கின் ஒளியிலே நாம் தேடி அறிய வேண்டியது மெய்ம்மை மெய்ம்மைத் தெளிவைத் தரவல்லது எது? அது கல்வி, கல்வி முயற்சிக்கு இன்றியமையாதது கல்விக் கூடம் இதனை நன்கு உணர்ந்த பெரியவர் ஒருவர் சென்ற நூற்றாண்டிலே வாழ்ந்தார். அவர் தான் முதலியார் அத்தியார் அருணாசலம்.

அத்தியாரின் பொதுநலத் தொண்டுகளிலே தலைசிறந்தது நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியை நிறுவி நடத்தியமை அக்கல்லூரியின் தாரக மந்திரம் பொய்யா விளக்கே விளக்கு என்பது, கல்வியின் அருமைப்பாட்டையும் அதன் பெறுமதியையும் நன்கு உணர்ந்திருந்தபடியால் முதலியார் தாம் நிறுவிய கல்லூரிக்கு 'பொய்யா விளக்கேவிளக்கு' என்னும் மகிட வாசகத்தைத் தெரிந்து எடுத்துக் கொண்டார்.

### சங்கரபண்டிதரும் சைவப் பாடசாலையும்

அத்தியார் காலத்து இலங்கையில் இலவசக் கல்வி என்று ஒரு பண்டம் இருந்ததில்லை, பக்திக் கூர்மையும் கல்வி விருப்பும் உள்ள சிறுவர்கள் ஊர்ப் பெரியவர் ஒருவரின் தயவை நாடி அவரிடம் உதவி பெற்று விடாமுயற்சியினாலே தம் கல்வியினை மேம்படுத்திக் கொள்வது தான் அக்கால வழக்கம் என்று அக்காலத்து முதியவர்கள் சொல்லக் கேள்வி. அப்படிப் பட்ட தனியாசிரியர் கல்வி முறை சற்றே விருத்தியான நிலையில் திண்ணைப் பள்ளிக் கூடங்கள் நடைபெறலாயின. அவ்வாறு இயங்கிய திண்ணைப் பள்ளிக்கூடங்களிற் சில, கூர்ப்படைந்து சிறு பாடசாலைகளாய் உருமாற்றம் பெற்றன அவற்றுள் ஒன்று தான் நீர்வேலி சிவத்திரு சங்கரபண்டிதரின் முயற்சியால் நடைபெற்றுக் கொண்டிருந்த சைவப்பாடசாலை. பண்டிதரின் பிள்ளைகள், தம் தந்தையார் தோற்றுவித்த பாடசாலையைத் தம்மால் இயன்றவரை நடத்தினார்கள் ஆயினும் அவர்கள் கடன்காரர் ஆகியது தான் கண்ட மிச்சம் என்று சொல்லப்படுகிறது.

அக்காலத்திலே கிறிஸ்தவ மிஷனரிமாரின் செல்வாக்கு மேலோங்கியது கல்வி வியாபாரப் பொருளாயிற்று கல்வியின் பெயரால் மதமாற்றம் மும்முரமாய் நடந்து கொண்டிருந்த இந்தத் தருணத்திலே சங்கரபண்டிதரின் மக்கள் கடன் காரணமாகத் தம்கலாசாலையை மிஷனரி மாருக்கு 'விற்றுவிட' எண்ணினர்.

### அத்தியார் இந்துக் கல்லூரி

இதனை அறிந்தார் அத்தியார் சங்கரபண்டிதரின் சந்ததியாரைச் சந்தித்தார். விலையினைக் கொடுத்தார்கல்லூரியைக் கையேற்றார்.

'உழைத்த உழைப்பெல்லாம் உனக்கே என்று அக் கல்லூரிக்கே தம் உழைப்பெல்லாம் தந்து மகிழ்ந்தார்'

இது தான் அத்தியார் இந்துக் கல்லூரி உதயமாகிய விருத்தாந்தத்தின் கதைச் சுருக்கம், இன்று அந்தக் கல்லூரி அகன்றுபரந்து உயர்ந்து ஓர் உன்னத நிலையை எய்துவதற்காக இடையீடின்றி முயன்று கொண்டிருக்கிறது. வலிகாமம் கிழக்கில்ஒளிவீசிக் கொண்டிருக்கும் தலைசிறந்த கல்லூரிகளில் ஒன்று எனப் பேசப்படும் தகுதியைப் பெற்றுத் திகழ்கிறது. புதுப்புதுக் கட்டிடங்களையும் புதுப்புது வசதிச் சேவைகளையும காலந்தோறும் பெற்று விரிந்து கொண்டிருக்கிறது கல்வித் தரத்திலும் கலைத்திறத்திலும்மேன்மேல் உயர்வதையே தன் இலட்சியமாக்கி வளர்தல் வேண்டும் என்று இந்தக் கல்லூரியின் பழைய மாணவர்களும் நலன் விரும்பிகளும் ஆசைப்படுகிறார்கள்.

### நினைவு மலர்

செப்ரெம்பர் மாதம் இருபத்திரண்டாம் திகதி, இக் கல்லூரி, தன்னை நிறுவிய சான்றோராகிய அத்தியார் அருணாசலம் அவர்களின் நினைவு நாளைச் சிறப்பாகக் கொண்டாடிற்று27-08-1887 இல் தோன்றிய அத்தியாரின் வாழ்வு 22-09-61 இல் நிறைவெய்திற்று. அவர் நினைவினைப் போற்று முகமாக அத்தியார் இந்துக் கல்லூரிக் கல்விச் சமூகம் 1961 இல் ஒரு நினைவு மலரினை வெளியிட்டிருந்தது. அந்த மலரில், அக் காலத்துச்சமூகப்பிரமுகர் பலரும், அறிஞர்களும், கற்றறிவாளர்களும், பள்ளி மாணவர்களும், பழைய மாணவர்களும் கட்டுரைகள் பலவற்றைஎழுதியிருந்தனர்.

சேர். கந்தையா வைத்தியநாதன், அச்சுவேலி ச. குமாரசுவாமிக் குருக்கள், புறொக்றர் எஸ். சிவசுப்பிரமணியம், இராசவாசல் முதலியார் சி தியாகராசா, முகாந்திரம் இ. பி. இரசையா முதலானோர், அந்த நினைவுமலரிலே கட்டுரைகளையும் நயப்புக் குறிப்புகளையும் வரைந்திருந்தனர் அந்த நினைவு மலரில் வெளியிடப்பட்ட விடயங்கள் அனைத்தும் அத்தியார் அவர்களின் ஆளுமையையும் அவர் தம் பன்முகச் சிறப்பையும் திறம்பட எடுத்து உணர்த்துவனமாய் உள்ளன. அவ்வளவில் அமையாது, அந் நினைவு மலரின் உள்ளடக்கம் யாழ்ப்பாணத்துக் கல்வி நிலையும் சமூக நிலையும்சமய நிலையும் எவ்வாறிருந்தன என்பதை அறிந்து கொள்வதற்கு உதவும் வரலாற்று உசாத்துணை ஆவணங்களாகவும் மிளிர்கின்றது. கல்லூரி நிறுவுநர் என்ற பெருமைக்கு அப்பால், அத்தியார் அருணாசலம் அவர்களின் சமூகப்பணிப் பங்களிப்புகள் பல வற்றையும் உணர்த்துகின்றது.

இந்த நினைவு மலர், கல்வித் தொண்டின் மகிமையையும் பொதுநலப் பணிகளின் மாண்பையும் உளங்கொண்டு வாழ்ந்த பெரியவர்கள் பலர், சென்ற நூற்றாண்டில் நம்மிடையே வாழ்ந்து, அரிய காரியங்கள் சிலவற்றைச் சாதித்தனர் என்ற உண்மையை வலியுறுத்தியவாறு உள்ளது; அத்தியார் அருணாசலம் அவர்கள் நீர்வேலிக் கிராமச் சங்கத்தின் உறுப்பினராகவும் தலைவராகவும் பணியாற்றியதுடன், அரசாங்கத் தரப்பினரின் மதி புக்கும் பாராட்டுக்கும் உரியதொரு பெருமகனாய்த் திகழ்ந்த செய்தியையும் பதிவு செய்துள்ளது.

### நினைவு மலர் மீள்பதிப்பு

சமாதான நீதவான் எனவும் முதலியார் எனவும் கௌரவிக்கப்பட்டஅத்தியாரவர்களின் நினைவுமலர், இப்பொழுது. சரியாக நாற்பத்தோர் ஆண்டுகளின் பின்னர் மீள்பதிப்புச் செய்து வெளியாக்கப்பட்டுள்ளது. இந்த மீள்பதிப்பு முயற்சியினில் முன்னின்று உழைத்து நலம் சேர்ந்தவர் நீர்வை மணி என்னும் புனைபெயரினைஉடைய பிரம்ம ஸ்ரீ கு. தியாகராஜக் குருக்கள் ஆவர். எதுவித கைம்மாறும் கருதாது பொது நலப் பணிகளை உவந்து மேற்கொண்டு வரும் குருக்கள் இந்த மீள்பதிப்பு மூலம், சீரியதொரு முன்மாதிரியாகத் திகழும் ஆற்றலையும் வேட்கையையும் வெளிப்படுத்தி உள்ளார்.

'தொன்மை மறவேல்' என்பது விழுமியதொரு திருவாய் மொழி. ஏனெனில், தொன்மை என்பது முன்னைப் பழம்பொருள். அந்தப் பழம்பொருளே, பின்னைப் புதுமைக்கும் பின்னைப் புதுப் பொருளாய்க் கூர்ப்புப் பெற்று பூத்துக் குலுங்கும் ஆற்றலையும் தன்னுள்ளே புதைத்து வைத்திருப்பது.

புதுமையின் ஒளி வீச்சுகளை மறைத்து மூடியிருக்கும் குப்பைகளை விலக்கி, அழுக்காகிய மாசுகளை அகற்றித் தூய்மைப் படுத்தினால், அறிவாளியாகிய புதிய வெளிச்சம் நமக்குக் கிடைக்கும் நீர்வேலி அத்தியார் நினைவு மலர்;- அந்த மலரின் மீள்பதிப்பு- இளைய தலைமுறையினர் கண்டு தெளிய வேண்டிய பல செய்திகளை வலியுறுத்தி உணர்த்துகிறது. மீள்பதிப்புக்குக் காலாயிருந்த 'நீர்வை மணியின்' பணிகள் தொடரட்டும்.

முருகையன்

---

தினசரி தியானம்

## மன்னர்

எல்லாநற்செயல்களுக்கும் மகிழ்ச்சிக்கும் அடிப்படையாக இருப்பது அன்பாகிய மதமே. அதுவே எல்லா சீலங்களுக்கும், வளர்ச்சிக்கும் அடிப்படையாகும். இளைப்பாறுவதற்கும் இறவா அமைதி கொள்வதற்கும் முடிவான மையம் இதுவே. இந்த ஒளியை உங்கள் உள்ளத்தில் ஏற்றுங்கள். ஏனெனில் இதுவேஇறைவனுடைய பேரரசுக்கு உடனடியான வழியாகும். ஆன்மாவைப் பற்றிய அறிவுடையவர் ஓய்வில் இருக்கிறார், அவர் தாம் உண்மையான தனவந்தர்; பற்றற்றவர்; மன்னருக் கெல்லாம் மன்னராவார்;

சுவாமி சிவானந்தர்.

---

# உலகவங்கி அதிகாரிகள்குழு 20 இல் மட்டு விஜயம்

(மட்டக்களப்பு)

உலகவங்கியின் உயர் அதிகாரிகள் குழுவொன்று எதிர் வரும் 20 ஆம் திகதி புதன் கிழமை மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் செய்யவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் உலகவங்கி நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களைபார்வையிடுவதற்காகவே இக்குழு அங்கு செல்லவுள்ளது.

இக்குழு எதிர்காலத்தில் மேற்கொள்ளப் படவுள்ள வேலைத்திட்டங்கள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடவுளளதும் குறிப்பிடத்தக்கது.

(உ-8)

# இவ்வாண்டில்இற்றைவரை 138 கொலைச் சம்பவங்கள்

(கொழும்பு)

பல்வேறு குற்றச் செயல்களில், தொடர்ச்சியாக ஈடுபட்டுவரும் 30 இராணுவ விட்டோடிகள் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவாராந்த செய்தியாளர் மாநாட்டில் பிரதிப்பொலிஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத் தெரிவித்துளளார்-

ஒவ்வொரு இராணுவ விட்டோடியும் பல குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்ததுடன் பாதாள உலகத்தவருடனும் தொடர்புகளை கொண்டுள்ளனர்.

2001 ஆம் ஆண்டில் கொலைகள் 151 மட்டுமே பதிவாகியுள்ளன. ஆனால்இவ்வாண்டு ஏற்கனவே இத்தொகை 138ஆக உயர்ந்துள்ளது.

குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸ் திணைக்களம்விசேடவேலைத் திட்டங்களை தொடக்கியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(உ)

## பூப்பந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் வை.எம்.சி ஏ. நடத்தும் பூப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளின் திறந்த போட்டிகள் இன்று காலை 9 00 மணிக்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆடுகளத்தில் இடம் பெறவுள்ளன.

(உ)

## இந்திய எதிர் மேற்கிந்தியத் தீவுகள்

# ஒருநாள் கிரிக்கட் போட்டியின் 4ம் நாளில் இந்தியா வெற்றி

(புதுடில்லி)

இந்தியா மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணிகளுக்கிடையேயான ஒருநாள் போட்டித் தொடரின் நான்காம் நாள் போட்டியில் இந்திய அணி 5விக்கெட்டுக்களினால் வெற்றியீட்டியது.

இந்தியாவின் அகமதாபாத் நகரில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி நிர்ணயிக்கப்பட்ட 50ஓவர்களின் முடிவில் 4விக்கெட்டுக்களை இழந்து 324ஓட்டங்களைப் பெற்றது அந்த அணியின் சார்பில் கிறிஸ்கெயில் 140 ஓட்டங்களையும் சர்வான் 99ஓட்டங்களையும் பெற்றனர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 47.4ஓவர்களின் முடிவில் 5விக்கெட்டுக்களை இழந்து 325ஓட்டங்களைப் பெற்றது. இந்த அணியின் சார்பில் ராகுல்ராவிட் 109ஓட்டங்களையும் வி.வி.எஸ். லக்ஸ்மன் 66ஓட்டங்களையும் பாங்கார் 57 ஓட்டங்களையும் பெற்றனர்.

இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் போட்களின் ஐந்தாவது போட்டி எதிர்வரும்18ம் திகதி நடைபெறவுள்ளது.

(ந-5)

---

### அமைச்சர்...

பின்பற்ற வேண்டிய நடை முறைகள், திட்டங்கள் குறித்து ஜனாதிபதி குமாரதுங்க அமைச்சர் மொறகொடவுக்கு ஆலோசனை வழங்கினார்.

அத்துடன் சமாதானப் பேச்சுக்களில் இடம்பெற்ற சில அம்சங்கள் நாட்டு நலனுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் அது எதிர்காலத்தில் பல சிக்கல்களையும் ஏற்படுத்துமென்றும் ஜனாதிபதி கவலை தெரிவித்துள்ளார். இதேவேளை அரசதரப்பிற்கும் , ஜனாதிபதிக்குமிடையிலான சந்திப்புக்கள் இனிவரும்காலங்களில் தொடர்ந்து நடைபெறும் என்று ஜனாதிபதி செயலகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஒஸ்லோ மாநாட்டுக்குப் பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஜனாதிபதியைச் சந்தித்து பேசுவார் என்றும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளது.

(இ)

---

### சமஷ்டி முறையை...

களையும், சலுகைகளையும் அனுபவித்து வருகிறார்கள்.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு நடுநிலையாளராகச் செயற்படும் நோர்வே அரசு கூட விடுதலைப் புலிகளுக்கு சார்பாகவே செயற்பட்டு வருகிறது. அவர்கள் நடுநிலையாக இருந்து செயற்படவில்லை என்றும் லக்ஷ்மன் கதிர்காமர் நோர்வே மீது குற்றம் சாட்டியுள்ளார்.

இது இவ்வாறு இருக்க பொதுஜன ஐக்கிய முன்னணியும் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில்,

தற்போது தாய்லாந்தில் இடம் பெற்று வரும் அரசு - புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தை முன்னேறிச் செல்வதாக இலங்கை அரசும், வெளிநாட்டு அரசுகளும் கூறிவருகின்றன. இதனையே நோர்வேயும் கூறிவருகிறது. ஆனால் சமாதானப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏதும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அதற்கு மாறாகப் புலிகளின் பக்கமாகவே பேச்சுவார்த்தை நகர்ந்து செல்கிறது.

இந் நிலையில் பேச்சுவார்த்தை நடைபெற்றால் நாடு பிரிவடைவதை தவிர வேறு ஒரு வழியும் இல்லை என அவ்வறிக்கையில் பொதுஜன ஐக்கிய முன்னணி. குற்றஞ்சாட்டி உள்ளது.

(ம)

---

### சுற்றுலா...

கவலையை ஜனாதிபதி வெளியிட்டிருந்தார். தாய்லாந்தில் நடைபெற்ற பேச்சுக்களின் முன்னேற்றம் பற்றி ஜனாதிபதிக்கு விளக்குவதற்காக இச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நோர்வே அரசாங்கம் தமது நாட்டுக்கு ஒரு ஆய்வுச் சுற்றுலாவை மேற்கொண்டு வருமாறு சகல கட்சிகளினதும் தலைவர்களை அழைத்துள்ளது.

இதேவேளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவே முன்னர் நோர்வேயை அனுசரணையாளராக செயற்பட அழைத்திருந்தாராயினும் இன்றைய நிலையில் நோர்வே அரசு தனது சமாதானப்பணியை விட்டு அப்பால் சென்று செயற்படுவதாக அவர் நம்புகிறார் என்று பொ.ஐ.முன்னணி வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

(இ)

---

### பாதுகாப்பு உப...

நடைபெற இருந்த பாதுகாப்பு உபகுழுக் கூட்டம் பாதுகாப்பு காரணங்களுக்காக ரத்து செய்யப்பட்டு முகமாலை சூனியப் பிரதேசத்தில் இன்று காலை 10மணிக்கு நடை பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் அரசதரப்பில யாழ் மாவட்டத்தின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, பதில் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் இரத்தினசபாபதி ஆகியோரும் விடுதலைப்புலிகளின்சார்பில் விடுதலைப்புலிகள் வடமுனைக கட்டளைத்தளபதி கேணல் தீபன், யாழ்.மாவட்ட அரசியல்துறை பொறுபபாளர் சி.இளம்பரிதி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இச் சந்திப்பு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னிலையில் நடைபெறவுள்ளது..

இதேவேளை தெல்லிப்பழையில் நடைபெறவிருந்த பாதுகாப்பு உப குழுவின் கூட்டத்தில் விடுதலைப்புலிகளின் சார்பில் கலந்து கொள்ளவிருந்த வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபனின் பாதுகாப்பு தொடர்பாக அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இணக்கம் காணப்படாததை அடுத்தே இன்றைய சந்திப்பு முகமாலையில் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

(ம)

---

### வட - கிழக்கில்...

பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினரும் ஒன்றிணைந்து விழிப்பாகச் செயற்பட வேண்டும் எனக் கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் கேட்டுள்ளதுடன் இவ் விடயம் தொடர்பாக கிராம உத்தியோகத்தர்களின் தலைமைச் சங்கம் மௌனமாக இருப்பதையிட் டும் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.

(வீ)

---

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை - கணேசலிங்கம்

(கணபதி - கணேசன்)

செம்பருத்தி பப்ளிக்கேசன்ஸ்- மலேஷியா.

பிரபல ஈழத்து எழுத்தாளர் திரு.கணபதி கணேசன் அவர்கள் 13.11.2002 புதன்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை- செல்லம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற பண்டிதர் திருநாவுக்கரசு (அதிபர்) தங்கம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை- நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம்) தம்பதிகளின் மருமகனும், கௌரி (ஆசிரியை யாழ் நாவாந்துறை றோ.க வித்தியாலயம்)யின் அன்புக்கணவரும், யதுநந்தன் (உயிரியற்பிரிவு -2002 யாழ் இந்துக்கல்லூரி), மதுரா (கலைப்பிரிவு- 2003 யாழ் வேம்படி மகளிர்கல்லூரி), ஆகியோரின் பாசமிகு தந்தையும், மயில்வாகனம்(கனடா), மகாலிங்கம் (வவுனியா), லோகநாதன் (வலம்புரி ஒப்புநோக்குநர்), காலஞ்சென்ற கனகலிங்கம், ஜெகதீஸ்வரி ஆகியோரின் அருமைச் சகோதரரும், தேவமனோகரி (சிலாபம்), முருகானந்தன் (நோர்வே), பிறைகுமார் (நோர்வே), துளசிமனோகரி (Husic THERAPIST இந்தியா) லில்லி (கனடா), தனபாக்கியலட்சுமி, சிவமலர் கதிர்வேல் (கதிர்வேல் நகைமாடம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஸ்ரீதரன் (நிலஅளவையாளர் -சிலாபம்), உமா (நோர்வே), சுகிர்தா (நோர்வே), Dr.கணேஷ் (இந்தியா) ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும், காலஞ்சென்ற நிமலராஜன் (பத்திரிகையாளர்), கனடாவைச்சேர்ந்த பிறேமராணி, கமலராணி, செல்வராணி, நிமலராணி, ஆனந்தவதனி, மகாலட்சுமி (இந்தியா) கமலவாணி, மங்களரூபி, மணவாளதாசன் (மேனுஜா ரேடர்ஸ் வவுனியா), கமலதாசன், பிரமாதீசன் (சுப்பஷோ), கமலவதனி (நுண்கலைப்பிரிவு- யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் சிறியதந்தையும், கார்த்திகா (கணிதப்பிரிவு 2002, கொழும்பு சைவ மங்கையர் கழகம்), அபிராமி (சென்பெனடிக்கல்லூரி சிலாபம்) ஆகியோரின் பெரிய தந்தையாரும், சசிதரன் (UK), விஜிதரன் (விளையாட்டு அலுவலர் நெடுந்தீவு), ஜெகதரன் (பொறியியல் பிரிவு- பேராதனைப் பல்கலைக்கழகம்), நோர்வேயைச்சேர்ந்த திவ்யா, சிநேகா, அபிஷேக் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் நாளை (17.11.2002) ஞாயிற்றுக்கிழமை, 70, சிவன்கோவில் தெற்குவீதி, திருநெல்வேலியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு தகனத்திற்காக மு.ப. 11மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

70. சிவன்கோவில் தெற்கு வீதி.
திருநெல்வேலி.

தகவல்
கௌரி கணேசலிங்கம்
(மனைவி)

[C/5271]


**கணனி இயக்குநர்களுக்கான பதவி வெற்றிடம்**

பிரபல தனியார் நிறுவனம் ஒன்றுக்கு கணனி இயக்குநர்கள் தேவை

தமிழ் ரைப்பிங் செய்யக்கூடிய ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும். தகுதியானவர்கள் தங்கள் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை

விளம்பர இலக்கம்:- 100.
வலம்புரி.
15. வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு 20.11.2002ற்கு முன்னதாக அனுப்பிவைக்கவும்



சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட

V.S.P ஸஞ் ஒயில்

தயாரிப்பாளர்

பரிமளா ஸ்ரோர்ஸ்

26A, மானிப்பாய் வீதி, [C/4839] யாழ்ப்பாணம்.


## தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 27.11.1982 தொடக்கம் 30.09.2002 வரை மாவட்டவாரியாக வீரச்சாவடைந்த மாவீரர்கள் விரிப்பு

| மாவட்டம் / ஆண்டு | யாழ் | | மட்டு | | வன்னி | | திருமலை | | முல்லை | | மன்னார் | | வெளி | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | |
| 1982 | 01 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 01 |
| 1983 | 11 | - | - | - | - | - | 04 | - | - | - | - | - | - | - | 15 |
| 1984 | 20 | - | 07 | - | 03 | - | 08 | - | 06 | - | 06 | - | - | - | 50 |
| 1985 | 46 | - | 60 | - | 14 | - | 41 | - | 08 | - | 14 | - | 05 | - | 188 |
| 1986 | 91 | - | 92 | - | 20 | - | 48 | - | 21 | - | 36 | - | 09 | 01 | 318 |
| 1987 | 246 | 05 | 76 | - | 46 | 03 | 54 | - | 17 | 01 | 48 | 05 | 15 | - | 516 |
| 1988 | 126 | 07 | 114 | 01 | 39 | 01 | 37 | - | 18 | 01 | 18 | 01 | 16 | - | 379 |
| 1989 | 147 | 02 | 86 | - | 54 | - | 47 | - | 37 | - | 27 | - | 18 | - | 418 |
| 1990 | 277 | 41 | 178 | 04 | 140 | 11 | 124 | 02 | 73 | 11 | 64 | 01 | 33 | 02 | 961 |
| 1991 | 510 | 104 | 310 | 18 | 180 | 33 | 169 | 18 | 114 | 19 | 100 | 15 | 22 | 01 | 1613 |
| 1992 | 224 | 46 | 240 | 09 | 83 | 06 | 65 | 01 | 40 | 07 | 48 | 06 | 13 | - | 788 |
| 1993 | 215 | 49 | 279 | 18 | 110 | 28 | 76 | 06 | 55 | 11 | 61 | 12 | 05 | - | 925 |
| 1994 | 90 | 11 | 161 | - | 30 | - | 40 | - | 18 | 01 | 22 | - | 02 | - | 375 |
| 1995 | 419 | 177 | 433 | 15 | 150 | 43 | 81 | 06 | 60 | 25 | 64 | 19 | 10 | 03 | 1505 |
| 1996 | 446 | 142 | 321 | 33 | 129 | 53 | 83 | 13 | 54 | 26 | 55 | 14 | 04 | 04 | 1377 |
| 1997 | 520 | 227 | 641 | 65 | 168 | 92 | 118 | 19 | 91 | 52 | 46 | 44 | 15 | 08 | 2106 |
| 1998 | 360 | 271 | 429 | 94 | 133 | 140 | 99 | 36 | 58 | 69 | 54 | 22 | 17 | 16 | 1798 |
| 1999 | 362 | 203 | 323 | 68 | 144 | 118 | 79 | 19 | 86 | 57 | 51 | 23 | 07 | 05 | 1545 |
| 2000 | 473 | 318 | 228 | 79 | 234 | 179 | 100 | 27 | 105 | 78 | 62 | 45 | 35 | 17 | 1980 |
| 2001 | 171 | 117 | 119 | 28 | 74 | 58 | 45 | 12 | 41 | 27 | 31 | 22 | 08 | 06 | 759 |
| 2002 | 08 | 04 | 02 | 04 | 04 | 01 | 02 | - | 02 | 02 | - | 01 | - | 01 | 31 |
| ஆ.பெ.மொ | 4763 | 1724 | 4099 | 436 | 1755 | 766 | 1320 | 159 | 904 | 387 | 807 | 230 | 234 | 64 | 17648 |
| மொத்தம் | 6487 | | 4535 | | 2521 | | 1479 | | 1291 | | 1037 | | 298 | | 17648 |


ராஜா யாழ்ப்பாணம்

அஜித் (இரு வேடங்களில்) மீனா, கிரண் நடித்த



வில்லன்

காட்சி நேரம்10.30, 2.30, 6.30 (புதிய நேரம்)

விசேட காட்சி: 9.30


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.11.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.